விலை ரூபா: 5.00 பக்கங்கள் பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI




சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 தை 30 செவ்வாய்க்கிழமை (12.02.2002) தொலைபேசி 3378, ஒலி 55

### யாழ்ப்பாணம் வருவதற்கான

## பாதுகாப்பு அமைச்சின் அனுமதி நேற்று முதல் நீக்கம்

(கொழும்பு)

வெளியிடங்களில் இருந்து யாழ்ப்பாணம் வருவதற்கு அரசினால் ஏற்கனவே அமுலப்படுத்தப்பட்டிருந்த பாதுகாப்பு அமைச்சின் அனுமதி முறை நேற்று முதல் நீக்கப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்பமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இது குறித்து பாதுகாப்பு அமைச்

(10ம் பக்கம் பார்க்க)

## தமிழக முகாம்களில் தடுத்துவைத்துள்ள ஈழத்தமிழரை விடுதலை செய்யவேண்டும்

### தமிழர் தேசிய இயக்கம் கோரிக்கை

(சென்னை)

தமிழ் நாட்டில் உள்ள சிறப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்களை விடுதலைசெய்து பாதுகாப்பாக இலங்கைக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

இவ்வாறு தமிழர் தேசிய இயக்க சிறப்பு மகாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

திருச்சியில் துரை மதிவாணர் தலைமையில் இடம்பெற்ற இம்மாநாட்டில்:

இலங்கை தமிழர் பிரச்சினையில் தற்போது தீர்வு எட்டப்படுவது போன்ற திருப்பம் ஏற்பட்டுள்ளது. சமாதானத்துக்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன. இந் நிலையில் யுத்த நிறுத்தம் மோதல் தவிர்ப்புக்களால் அமைதிச் சூழல் ஒன்று ஏற்பட்டுள்ளது.

எனவே சிறப்பு முகாம்களில்

(10ம் பக்கம் பார்க்க)

### நிரந்தர யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்தும்

# புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு இருதரப்பும் உடன்பாடில்லை

## நோர்வே தூதரகம் தகவல் 24ந் திகதிக்குள் உடன்படலாம்?

(நமது நிருபர்)

**இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே நிரந்தர யுத்தநிறுத்தத்திற்கு வழிவகுக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக இருதரப்பும் இன்னமும் இணக்கப்பாட்டுக்கு வரவில்லை என்று நோர்வே தூதரகம் நேற்றிரவு அறிவித்துள்ளது.**

**எனினும் எதிர்வரும் 24ம் திகதிக்குள் ஓர் உடன்பாட்டுக்கு வரலாம் என்றும் தூதரகம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.**

இலங்கை அரசின் மோதல் தவிர்ப்பும், விடுதலைப்புலிகளின் யுத்தநிறுத்தமும் எதிர்வரும் 24ம் திகதி முடிவடைய உள்ளவேளையில் நிரந்தர யுத்தநிறுத்தத்துக்கு வழிவகுக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்னமும் இழுபறி நிலையில் இருப்பதாக நோர்வே தூதரகம் நேற்றிரவு அறிவித்துள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக நேற்றிரவு நோர்வே தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ள நோர்

(10ம் பக்கம் பார்க்க)

### பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை இன்று ஆரம்பம்

## வைத்திய நிபுணர் குழுவினர் நேற்று யாழ்.வந்தடைந்தனர்!

(யாழ்ப்பாணம்)

பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை மேற்கொள்ளும்வைத்திய நிபுணர் குழு நேற்று யாழ் போதனா வைத்தியசாலைக்கு வந்தடைந்தது.

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு வைத்திய நிபுணர்கள் இக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

16பேர் கொண்ட இக்குழுவில் 5பேர் இங்கிலாந்தைச் சேர்ந்த வைத்திய நிபுணர்கள், 8பேர் தமிழ் வைத்திய நிபுணர்கள் மற்றும் 3பேர் தென்பகுதி தாதியர் கள்.

இவர்கள் நேற்று மாலையே சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டியவர்களை பூர்வாங்க

(10ம் பக்கம் பார்க்க)

### வட பகுதிக்கு அத்தியாவசிய

## பொருட்கள் அனுப்பி வைக்க அமைச்சரவை உபகுழு

(கொழும்பு)

வடபகுதி மக்களின் அத்தியா

உபகுழுவில் அமைச்சர்கள் மெலிந்த மொறகொட, டாக்டர்

திகதி முடிவடைய உள்ளவேளை யில் நிரந்தர யுத்தநிறுத்தத்துக்கு வழிவகுக்கும் புரிந்துணர்வு ஒப் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக நேற்றிரவு நோர்வே தூதரகம் விடுத்துள்ள அறிக்கை ளுக்கும் இடையே சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ள நோர்

(10ம் பக்கம் பார்க்க)

# புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத் இன்று காலை யாழ். வருவார்!

## செயலகத்தில் விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

ஒருநாள் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா இரண்டாவது தடவையாக இன்று காலை 7.30மணிக்கு யாழ்ப்பாணம் வருகிறார்.

விமானமூலம் வரும் அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனாவை பலாலி விமான நிலையத்தில் அரச அதிபர் க.சண்முகநாதன் மற்றும் அரச உயரதிகாரிகளும் வரவேற்க உள்ளனர்.

அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனா விமான நிலையத்தில் இருந்து யாழ் வரும் வழியில் வலி வடக்கு பகுதியில் உள்ள மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், கீரிமலை சிவன்கோவில் மற்றும் காங்கே

(10ம் பக்கம் பார்க்க)

# புலிகளின் தளபதி மனோவை ஊடுருவித் தாக்கும் படையே கொன்றது!

## படை அதிகாரி திடுக்கிடும் தகவல்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதி மனோவை இலக்குவைத்து தாம் நடத்திய கிளைமோர்க்கண்ணித் தாக்குதலில், அவர் உயிர் இழந்தார் என்று புலிகளின் பகுதிக்குள் ஊடுருவிச் சென்று தாக்குதல் நடத்தும் படையணியை சேர்ந்த படையதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அத்துருகிரிய மிலேனியம் சிற்றிப் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து ஆயுதக் களஞ்சியம் ஒன்று பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டதோடு ஐந்து படையினரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவித் தாக்கும் படையணி தொடர்பான பல தகவல்கள் வெளிவரத் தொடங்கியது.

மேற்படி சம்பவம் குறித்து ஊடுருவித்தாக்கும் படையணியை சேர்ந்த அதிகாரி ஒருவர் வழங்கிய பேட்டியை கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தியாக வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

(2ம் பக்கம் பார்க்க)

# அமைச்சரவை உபகுழு

(கொழும்பு)

வடபகுதி மக்களின் அத்தியாவசிய உணவுப்பொருளின் தேவைகளைக் கவனிப்பதற்கு அமைச்சரவை உபகுழுவொன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினால் நியமிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் தயானந்த தலைமையிலான இந்த உபகுழுவில் அமைச்சர்கள் மெலிந்த மொறகொட, டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா உட்பட எட்டு அமைச்சர்கள் இடம்பெற்றுள்ளனர்.

அமைச்சர் குழுவுடன் முப்படைத்தளபதிகள், பொலிஸ்மா அதிபர், அமைச்சர்களின் செயலாளர்கள், தொண்டர் நிறுவன

(10ம் பக்கம் பார்க்க)

### பொலிஸ் அத்தியட்சகர் பதவிஉயர்வை

# உயர் நீதிமன்றம் ரத்துச்செய்தது

### மனுதாரர்களுக்கு நட்டஈடு வழங்கவும் பணிப்பு

(கொழும்பு)

கடந்த அரசினால் உதவி பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு வழங்கப்பட்ட பதவி உயர்வினை உயர் நீதிமன்றம் நேற்று ரத்துச்செய்துள்ளது.

உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் 46பேர் தமது அடிப்படை மனிதஉரிமை மீறப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு மனுஒன்றை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தனர்.

பொலிஸ்மா அதிபர், முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் சந்தானந்தடி சில்வா, முன்னாள் காலாச்சார சமய விவகார அமைச்சின் செயலாளர் ஆர்.கே.கேரணவீர, முன்னாள் தபால் தொலைத்தொடர்பு ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.எம்.ஜி. சேனாரத்தின, முன்னாள் வெளிவிவகார அமைச்சின் மேலதிக செயலாளர் ஜெயசிங்க ஆகியோரைப் பிரதி வாதிகளாக குறிப்பிட்டு இம் மனுதாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(10ம் ப்க்கம் பார்க்க)


நாளைய வலம்புரியில்

தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

(தொடர்ந்து வரும் புதன்கிழமைகளில் எதிர்பாருங்கள்)


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# புலிகளின்

கடந்தவருடம் டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி இராணுவப்புலனாய்வுப் பிரிவு மட்டக்களப்பில் புலிகளின் இரு முக்கிய இலக்குகள் மீது தாக்குதல் நடத்தத்திட்டமிட்டது. அது வெற்றிகரமாக நடைபெற்றிருந்தால் எமது நடவடிக்கைகளிலேயே அது மிகப்பெரும் வெற்றியாக இருந்திருக்கும்ஆனால்அதுநடைபெறவில்லை.

ஊடுருவல் படையணியில் ஒரு பிரிவு கொக்கட்டிச்சோலையில் புலிகளின் முன்னரங்க எல்லையின் பின்புறமாக ஊடுருவி உள்ளே நுழைந்தது மற்றைய அணி கிழக்கில் புலிகளின் முக்கிய தளங்களில் ஒன்றான பெய்ரூட்தளத்தை நோக்கி ஊடுருவியது.

புலிகளின் முக்கிய தளபதிகளில் ஒருவரான கேணல் கருணாவும், அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களில் ஒருவரானரமேஸுமே இவர்களது இலக்காயிருந்தது.

இவர்களை இலக்குவைத்து ஊடுருவல் படையணி (ஒருசிலர்) ஐந்து நாட்களாக இரவு பகலாக மிகுந்த அவதானத்துடன் காத்திருந்தது.

டிசம்பர் 24 ஆம் திகதிஇவர்களது தொலைத் தொடர்புக் கருவி அலறியது எல்லாநடவடிக்கைகளையும் கைவிட்டு உடனடியாக முகாம் திரும்புமாறு இராணுவப் புலனாய்வுப் பணியகம் கட்டளையிட்டது.

## புலிகள் என நினைத்தனர்.

புலிகள் ஒருதலைப்பட்சப் போர்நிறுத்தம் அறிவித்து அதற்குச் சாதகமாக அரசும் மோதல் தவிர்ப்பை அறிவித்ததே இதற்குக் காரணமாகும்.

இதனால் தாக்குதல் இலக்கைக் கைவிட்டு திரும்ப வேண்டியிருந்தது. ஆனால்,அது மிகவும் கஷ்டமானதும். சிரமத்திற்குரியதுமாகிவிட்டது இரு இடங்களில் நாம் அடையாளம் காணக்கூடிய சந்தர்ப்பமேற்படலாம் எனப்பயந்தும் ஒருவாறு பாதையை மாற்றி வந்த போது மூன்றாவது முறையாக பெண் ஒருவரால் அடையாளம் காணப்பட்டிருப்போம்.

எனினும் அந்தப் பெண் எம்மை புலிகள் என நினைத்தாரோ, என்னவோ, மீண்டும் பாதையை மாற்றி நீண்ட கால அவகாசத்தின் பின் முகாமைச் சென்றடைந்தோம்.

ஒருமுறை இவ்வாறு நாம் அடையாளம் காணப்பட்ட போது. எம்மிடமிருந்த வானொலிக் கருவி மூலம் அருகிலிருந்த அதிரடிப்படைமுகாமுடன் தொடர்புகொண்டு நாமிருக்கும் இடம் பற்றிய முழு விபரத்தையும் கூறவே, அவர்கள எமக்கு அப்பால் மோட்டார் குண்டுகளை மழைபோல் பொழிய, அந்த அவகாசத்தைப் பயன்படுத்தி பலத்த பிரயத்தனத்தின் மத்தியில் தப்பினோம் எனத் தெரிவித்தார்.

இதுபற்றி மேலும் அவர் கூறுகையில்.கடந்த வருடம் இதேபோன்றதொரு வேலை புலனாய்வுப் பிரிவால் வழங்கப்பட்டது மட்டக்களப்பிற்கு சமீபமாக வவுணதீவு இராணுவமுகாமிலிருந்து இரு சகாக்களுடன்இரவுநேரத்தில் கண்ணிவெடிகள புதைக்கப்பட்ட பகுதிகளையெல்லாம் சமாளித்து அதிகாலையில் காட்டுப்பகுதிக்குள் நுழைந்தோம் அச்சம் காரணமாக அன்றுமாலைவரை காட்டுக்குள் பதுங்கியிருந்தோம்.

நீண்டதூரம் பார்க்கக் கூடியபைனாகுலர்கள் மூலம் மக்களினதும் புலிகளினதும் நடமாட்டத்தைஉன்னிப்பாக அவதானித்தோம் நாம்எடுத்துச்சென்ற உலருணவுகளை உணவாகப் பயன்படுத்தினோம் இரவு10மணியளவில் காட்டுப்பகுதியிலிருந்து வெளியேவந்தோம்

நாம்தாக்குதல் நடத்த வேண்டிய இடத்தைநோக்கி இரவுநேரப் பார்வைக் கண்ணாடி(நைற் விஷன்)அணிந்து சென்றோம் ஏற்கனவே நாம் தாக்குதல் நடத்தவேண்டிய இலக்குகுறித்தும் அந்தப்பகுதி குறித்தும் எமக்கு விரிவாக விளக்கப்பட்டிருந்தது.

அன்றிரவு முழுவதும் அந்த இடத்தைநோக்கி ஆயுதங்களுடனும் ஏனையஉபகரணங்களைச் சுமந்தவாறும் நடந்தோம் அதிகாலைக்கு முன்பாகதாக்குதல் நடத்தவேண்டிய இடத்தை அடைந்துவிட்டோம்.

அதுஇலகுவானதொரு இடமல்ல ஒருகட்டத்தில் பொது மக்கள் கிலர்எம்மை அவதானித்த போது பயந்துவிட்டோம் ஆனால் எம்மைஅவர்கள்புலிகள என நினைத்ததால் ஆபத்தேற்படவில்லை.

## மேஜர் மனோ உயிரிழப்பு

கடந்த வருடம்நவம்பர் மாதம்17ந்திதி மக்கள்நடமாட்டமுள்ள பகுதிகளில் சிறிய குன்றொன்றின் அருகில்நிலையெடுத்து வீதியைநோக்கிஇருக்கத்தக்கவாறு கிளைமோர் கண்ணிவெடியைப் பொருத்தினோம் தாக்குதலுக்காகக் காத்திருந்தோம்.

அன்றுமாலை இருள்சூழும் நேரம் அப்பகுதியை நோக்கி டபிாகப்வாகனமொன்று வந்தது உள்ளேசிலர் இருந்தனர் வாகனத்தின் பின்புறப்பகுதியில் இருபுலிகள் இருபக்கமும் பார்த்தவாறு ஆயுதங்களுடன் இருந்தனர்.

இலக்குநெருங்கியதும் தாக்குதல் நடத்தப்பட்டது கிளைமோர் வெடித்ததில் டபிள்கப் வாகனம் தூக்கிவீசப்பட்டது வீதிப்பகுதியில் உடைப்பு தெரிந்தது சற்றுஅப்பால் வாகனம்பெரிதும் சிதைந்து போய்க் கிடந்தது'

நாம்ஒருவாறு அங்கிருந்து திரும்பி இரவுமுழுவதும்காட்டுக்குள் பதுங்கினோம் நாம் தாக்கியது புலிகளின் வாகனம் என்பது எமக்குத் தெரியும்.இதுபற்றி முகாமுக்கு அறிவித்தோம்.

மறுநாள் முகாம்திரும்பிய போது நாம்நடத்தியதாக்குதலில் புலிகளின் கிழக்குமாகாணமுக்கியஸதரும், கிழக்கில் புலிகளின் தொலைத் தொடர்புக்குப் பொறுப்பானவருமான மேஜர் மனோ அல்லது ஒஸ்கார் என்பவர் கொல்லப்பட்டதாக அறிந்தோம்.மனோவின் இழப்பு அவர்களுக்கு பேரிழப்பாகும்.

இந்தத் தாக்குதல் வெற்றியளித்தாலும் நாம் விரக்தியடைந்த சம்பவங்களும் உண்டு.

கடந்த வருடம் ஜூலை மாதம் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட இராணுவப் பொறுப்பாளர் ஜிம்கலியை இலக்குவைத்து ஊடுருவினோம் மட்டக்களப்புக்குத் தெற்கே ஓரிடத்திற்குச் சென்று இவருக்காக ஒரு வாரம் காத்திருந்தும் அவர் அப்பகுதிக்கு வராததால் ஏமாற்றத்துடன் திரும்பினோம்.

● இதேபோன்ற மற்றொரு சந்தர்ப்பமாக கடந்த செப்டெம்பர் மாதம் மட்டக்களப்புக்கு வடக்கே தாக்குதலொன்றுக்காக ஊடுருவினோம்- 5 நாட்கள் காத்திருந்தோம். எமது இலக்காகக் கருதப்பட்டவர் எவ்வேளையிலும் அவ்விடத்திற்கு வருவாரென நாம் எதிர்பார்த்திருந்தவேளையில் கடும் மழை பெய்து எதுவுமே தெரியாமல் போனதுடன் வாகனம் வரும்வாய்ப்பே இல்லாததால் அந்த முயற்சியும் கைவிடப்பட்டது.

## லெப்கேணல் நிஸாம் உயிரிழப்பு

● ஆனாலும் கடந்த வருடம் ஜூன் மாதம் 6ஆம்திகதி வெற்றிகரமான தாக்குதலொன்றை நடத்தினோம்.

கொக்கட்டிச் சோலையில் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் புலிகளின் கிழக்குப் பிராந்தியப் புலனாய்வுப் பிரிவுத் தலைவரும் கொழும்பில் நடைபெற்ற பல்வேறு தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களைத் திட்டமிட்டு நடத்திவந்தவருமான லெப். கேணல் நிஸாம் அல்லது நவம்பர்மைக் (ரேடியோ அழைக்கும் பெயர்) கொல்லப்பட்டார்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 26ஆம் திகதி மட்டக்களப்பில் புலிபாய்ந்தகல் பகுதியில் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் 80மி.மீ. மற்றும்120 மி.மீ. மோட்டார் தாக்குதல்களை மிக நுட்மமாகக் கையாளும் மேஜர் சுவர்ணசீலன் கப்டன் தேவதாஸ் ஆகியோர் கொல்லப்பட்டனர்.

## புலிகளிடம் சிக்கினார்

டிசம்பர் 3 ஆம் திகதி புலிகளின் சிரேஷ்ட தலைவர் ஒருவருக்காக காத்திருந்து இசுசு எல்வ் வானொன்றின் மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதல் குறிதப்பினாலும் 3 புலிகள் கொல்லப்பட்டனர்.

இவ்வாறான தாக்குதல் நடவடிக்கைக்காகஎன்னுடன் சேர்ந்து செயற்பட்ட ஒருவர் கிளைமோர் குண்டுடன் புலிகளிடம் கையும் மெய்யுமாக பிடிபட்டுப் பின்னர் புலிகள் அவரை துரோகி எனக்கூறி மரணதண்டனை வழங்கியது எனக்குப் பெரும் கவலையை ஏற்படுத்தியது. இவ்வாறான பல சந்தர்ப்பங்களில் அவர் எனது உயிரையே காப்பாற்றியிருந்தார் எனவும் தெரிவித்தார்.

இவ்வாறான ஊடுருவல் தாக்குதலுக்காக படையினருக்கு உதவியவர்களில் மூவர் புலிகளால் பிடிக்கப்பட்டு மரணதண்டனை வழங்கப்பட்டது. மண்முனைத்துறையிலிருந்து புலிகளின் பகுதிக்குள் இப்படையினரை இரவு நேரத்தில் எவர் கண்ணிலும் அகப்படாது படகு மூலம் ஏற்றிச்சென்று இறக்கிய படகோட்டி ஒருவரும் இதில் அடங்குவர். என்று அவர் மேலும் கூறியுள்ளார். (இ)

# யுத்தத்தை முடிவுக்குக்கொண்டுவரும் வல்லமை பிரதமருக்கே உண்டு

## அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்காதெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் பல வருடங்களாக தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தத்தை விரைவில் முடிவுக்குக் கொண்டுவரும் வல்லமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கே உள்ளதென்று விவசாய மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சர் எஸ். பி. திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.

ஹங்ராங்கத்தைப் பிரதேசத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் அமைச்சர் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறுதெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான சந்தர்ப்பம் கடந்த கால ஆட்சியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கும் வழங்கப்பட்டது. எனினும் அவர் அதனைக் கைநழுவவிட்டுள்ளார்.

யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டவுடன் யாழ்ப்பாணம், திருகோணமலை உட்பட வடக்குக் கிழக்கு மாகாண மக்களுக்கும் தென்பகுதியில் வாழும் மக்களிடையே சமாதானத்தையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்த அரசாங்கம் திடசங்கற்பம் பூண்டுள்ளதென்று தெரிவித்த அமைச்சர்,

சமாதானம் ஏற்பட்டவுடன் யாழ்குடாநாட்டில் வறுமையில் வாடும் மக்களுக்கு நன்மையளிக்கும் பல திட்டங்களை கால்நடை அமைச்சின் ஊடாகவும் சமுர்த்தி திட்டமூடாகவும் முன்னெடுக்கவுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். (இ-4)

## பாடசாலைக்கு அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மகாவித்தியாலய வலைப்பந்தாட்ட அணிக்குத் தேவையான சீருடைமற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்ய இங்கிலாந்திலிருந்து யாழ்ப்பாணம்வந்துள்ள பாடசாலையின் பழைய மாணவன் எஸ்.ஸ்கந்ததேவா பதினையாயிரம் ரூபா பணம் அன்பளிப்புச் செய்துள்ளார்.

அத்துடன் வறுமைக் கோட்டின் கீழ்வாழும் இரு மாணவர்களின் கல்விச் செலவையும் தான் பொறுப்பேற்றுக் கொள்வதாக உறுதியளித்துள்ளார்.

இதேவேளை கொழும்பிலிருந்துயாழ்ப்பாணம் வந்துள்ள தொழிலதிபர்ஆர்.விஜயகுமார் பாடசாலை நூலகத்துக்கு ஒருலட்சம் ரூபாவுக்கு புத்தகங்கள் கொள்வனவு செய்து கொடுப்பதாகஉறுதியளித்துள்ளார். (இ)

## யாழில் படையினர் வசமுள்ள பாடசாலை விபரம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் பாதுகாப்புப்படையினர் வசமுள்ள பாடசாலைகளின் விபரம், மற்றும் பாடசாலைகளுக்கு அருகில் உள்ள படைமுகாம்கள், காவலரண்கள், சோதனைச் சாவடிகள் ஆகியன பற்றிய விபரங்களை, கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறு வலயக் கல்விப்பணிப்பாளர்களை வடக்குக் கிழக்கு மாகாண கல்விபமைச்சின் செயலாளர் கே. சண்முகலிங்கம் கேட்டுள்ளார்.

இதேவேளை இவ்விபரம் குறித்து கடந்த முதலாந்திகதி சகலவலயக் கல்வியப்பணிப்பாளர்களுக்கும்சுற்று நிருபங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது (இ-19)

## அமைச்சின் உப அலுவலகம் திறப்பு விழா வெள்ளியன்று

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அமைச்சின் உபஅலுவலகம் ஒன்று யாழ். செயலகத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இதற்கான வேலைகள் யாவும் ஏற்கனவே பூர்த்தியடைந்த போதும் யாழ்.செயலகம் முன்மீனவர்கள் மேற்கொண்ட போராட்டத்தின் காரணமாக திறப்பு விழா நடத்துவதற்கு தாமதம் ஏற்பட்டு வந்ததாகவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன. (செ-10(

## எதிர்க்கட்சித் தலைவர் பிரதமருடன் சந்திப்பு

(கொழும்பு)

அரசியல் நிர்ணய சபைக்கு ஆட்களைநியமிப்பதுதொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ நேற்றிரவு சந்தித்துப் பேசியுள்ளார்.

இச்சந்திப்பின் போது அரசியல் யாப்பிற்குஆட்களை நியமிப்பது தொடர்பாக இருவரும் விரிவாக ஆராய்ந்துள்ளனர். (வ)

## வன்னிக்கான கண்டிவீதி திட்டமிட்டபடி 15இல் திறந்து வைக்கப்படுமாம்

(கொழும்பு)

வவுனியா யாழ் கண்டிவீதி 15 திகதி வெள்ளிக்கிழமை திறந்து விடப்படுவது உறுதிஎன இராணுவப் பேச்சாளார் சரத்கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

இவ்வீதி திறக்கப்படுவதற்கு அரசும் விடுதலைப் புலிகளும் தத்தம் பகுதிகளில் உள்ள மிதிவெடிகள்கண்ணிவெடிகள் பொறிவெடிகள் அகற்றி வருகின்றனார்.

இராணுவதரப்பில் நேற்றுவரை 84 கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாகவும் 15ம்திகதி பாதைதிறக்கக்கூடிய சாத்தியம் இருப்தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மேற்படி பாதை திறக்கப்படுவது சாத்தியமில்லை என்றுவெளிவந்த செய்தி தவறு என்றும் தெரிவிக்கப்படுகிறது' (ம)

## அவசர கலந்துரையயடல்

(யாழ்ப்பாணம்)

யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில் புதிய கல்வியாண்டின் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பித்து அனுமதி கிடைக்காத மாணவர்களுக்கான கலந்துரையாடல் நாளை புதன்கிழமை காலை 9மணிக்கு யாழ் தொழில்நுட்பக்கல்லூரி முன்றலில் நடைபெறுமென மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (ந-4)

# நல்லையில் ஆதீனம் அமைத்து நாவலர் வழியில்

# சைவம் வளர்த்த பரமாச்சாரிய சுவாமிகள்

அவர் தையல்நாயகி அம்பாளின் திருமகன். பூராட நட்சத்திரத்தில் தை அமாவாசையில் பிறந்தவர் என்பதால் குடும்பத்திற்கு ஆகாது என்று பெற்றோர் வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் தையல் நாயகிக்கு அவரைவிற்று வாங்கினார்கள்.

வண்ணார் பண்ணையில் செல்லையாக்குருக்கள் தம்பதியருக்கு 1918 ஆம் ஆண்டு பெப்ரவரி 12ஆம்திகதி அவர் பிறந்தார். பெற்றோர் அவருக்குச் சிவசுப்பிரமணியம் எனப் பெயரிட்டனர். வித்துவ சிரோன்மணி கணேசையரும் காசிவாசி செந்திநாதையரும் அவரது தாய்வழிப் பேரன்மார். சங்கீதத்திலும் கதாப் பிரசங்கத்திலும் மேதாவிலாசத்துடன் திகழ்ந்த சங்கரசுப்பையர் அவரது தகப்பன்வழிப் பேரன்.

அவர் செல்லப்பா சுவாமிகள், யோகசுவாமிகள் ஆகியோரை நேரில் சந்தித்து ஆசி பெற்றவர். சுவாமி விபுலாநந்தர் துறவு பூணுவதற்கு முன் ஆசிரியராக யாழ்ப்பாணத்தில் பணிபுரிந்தகாலத்தில் அவரது இல்லத்தில் தங்கியிருந்தவர்.

**ஆன்ம விழிப்பு**

இளங்குருத்துப் பராயத்திலேயே இந்த ஆத்ம ஞானிகளின் பேரருட் பார்வையில் ஆன்மா விழிப்புப் பெற்றவராக அவர் வளர்ந்தார். கல்வி இசை ஞானங்களில் தான் சிறந்து மேன்மைபெற வேண்டும்என்று வேண்டி வைத்தீஸ்வரப் பெருமானுக்குத் தொண்டு செய்வதோடு கோவில்பிரசாதத்தினை உண்டால் இந்த ஞானங்களை உண்டமைக்குச் சமம் என்ற மனப்பக்குவத்தோடு அவற்றை உண்டு அங்கேயே சிலவேளைகளில் படுத்தும் விடுவார்.

**ஆசிரியர்**

வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்திலும் யாழ். இந்துக் கல்லூரியிலும் கல்வி கற்று 'மெற்றிக்கு லேசன்' பரீட்சையில் சித்தியடைந்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும், பின்பு வைத்தீஸ்வரா வித்தியாலயத்திலும் ஆசிரியராகக் கல்வி போதித்தார்.

இளமையில் அரும்பிய ஆன்மீக விழிப்பும், சங்கரசுப்பையர் போல் தாமும் சங்கீத கதாப்பிரசங்கம்செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தின் உந்துதலும் ஆசிரியத் தொழிலுக்கு முழுக்குப் போட்டு அவரை

**இன்று சுவாமிகளின் ஜனன தினம்**

ஞான முழுக்கில் ஈடுபடச் செய்தன.

**கதாப்பிரசங்கம்**

வைத்தீஸ்வரன் கோவிலில் ஆறுமுக நாவலர் ஆரம்பித்து ஆற்றிய பிரசங்கப் பணியை கதாப்பிரசங்க முறையில் செய்யத்தொடங்கினார். இளமையிலிருந்து அவர் சங்கீதம் முறையாகக் கற்றிருந்தார். சமய நூலறிவு அவரது பரம்பரையின் ஊறலாகவும் அவரது முயற்சியின் பேறாகவும் அவரிடம் சுடர்விட்டன.

தையல் நாயகி அம்பாளின் வாசலின் எதிரேயுள்ளஅமிர்த புஷ்கரணி தீர்த்தக்கேணியில் கழுத்தளவுதண்ணீரில் நின்று' தொண்டையால் தான் செய்யும் தொண்டிற்கு இனிய குரலும் ஞானமும் அருள வேண்டும் என்றுஅம்பாளைநோக்கி கண்ணீர் வழிந்து கேணியில் சங்கமமாக உருக்கமாகப் பாடிவந்தார்.

தையல்நாயகி தனது புத்திரனுக்கு மணியான குரல்வளமும் ஞானமும் அருளினாள். மணி ஐயரென்ற பெயருடன் பிரசங்கம் செய்யத் தொடங்கியவர் பிரம்மஸ்ரீ மணிபாகவதராகப் புகழ் பெற்றார். வைத்தீஸ்வரன் கோவில் தூண்களையோ, சுவர்களையோ சுண்டினாலும் மணிபாகவதரின் குரல் எழும் என்னும் அளவிற்கு அவரது பிரசங்கங்கள் அங்கு ஒலித்தன.

இசைக்கலை, நடனக்கலை, நாடகக்கலை ஆகியவைகளில் வல்லவராக, அவை மூலமும் ஆன்மீக உணர்வுகளை வளர்த்து வந்தார்.

**முருக பக்தி**

நல்லூர்க்கந்தப் பெருமானில் அவர் ஆழ்ந்த பக்தி உள்ளவர். திருவிழாக் காலங்களில் கந்த புராணம், மகாபாரதம்,

## கபிலர்

இராமாயணம், பெரியபுராணம் ஆகியவைபற்றி 25 நாட்களும் தொடர் பிரசங்கங்கள் வருந் தோறும் ஆலய வீதியில் ஆற்றிவந்தார். தேர்த் திருவிழா தினத்தன்று அதிகாலையில் அவர் அடியார்களுடன் சங்கரத்தையிலிருந்து பஜனை பாடிக் கொண்டு நடந்து நல்லைக் கந்தன் திருத்தலத்திற்குச் செல்வது அருள் எழுச்சி மிக்கதோர் காட்சியாகும்.

**பிறநாடுகளில் கதாப் பிரசங்கம்**

மலேஷியா, சிங்கப்பூர், தமிழ் நாடு முதலிய நாடுகளிலெல்லாம் அவரது கதாப் பிரசங்கத்திற்கு தனிமதிப்பு பெருகியிருந்தது, அவரதுமணி விழாவினை சிங்கப்பூர் அடியார் பெருமக்கள் சிறப்புற அங்கு நடத்தினார்கள்.

காலப்போக்கில் இப்போது ஆதீனம் அமைந்திருக்கும் இடத்தில் அவர் தங்கியிருந்து ஆத்மீகப் பணியை ஆரம்பிக்கத் தொடங்கியதோடு ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது.

1966 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி அவரது 50 ஆவது வயதில் மதுரை திருஞான சம்பந்த ஆதீன முதல்வராகிய ஸ்ரீ லஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவருக்கு ஸ்ரீலஸ்ரீசுவாமி நாததேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் என்று 'சிவபூசை எழுந்தருளச்' செய்து சிவசின்னங்களை வழங்கி ஆசீர்வதித்தார்.

அத்துடன், நல்லையில் அவர் தங்கியிருந்த வீட்டில் திருஞானசம்பந்தர் ஆதீனம் நிறுவப்பட்டு அவரது அருட் தொண்டு புதுவீச்சோடுநடை பெற்று வந்தது. கதாப்பிரசங்கங்கள் மூலம் அருட்காற்று வீசும் வண்ணம் தனது வளமான தொண்டையால் தொண்டு செய்த சுவாமிகள் 1981 ஆம் ஆண்டு தனது 66 ஆவது வயதில் திருவாதிரை நட்சத்திரத்தில் ஸ்ரீவாலாம்பிகை சமேத வைத்தீஸ்வரப் பெருமானது மலர்ப்பதத்தில் கலந்தார்.

திருஞானசம்பந்தப் பெருமான் திருஅவதாரம் செய்தமைஞானப்பால்உண்டமை, பேரொளியில் கலந்தமை ஆகியன திருவாதிரை நட்சத்திரத்திலேதான். சுவாமிகளின் சமாதியில் கட்டப்பட்ட சிவ மூர்த்திக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று திருவுளச் சீட்டுப் போட்டுப்பார்த்த போது 'வைத்தீஸ்வரன்' என்ற திருநாமத்திற்கு அனுமதி கிடைத்ததாம்.

---

விரிவுரைகள்

## 18ஆம்திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தேசிய கல்வியற் கல்லூரியின் 2002 ஆம் ஆண்டு புதிய அணியினருக்கானவிரிவுரைகள் யாவும் இம்மாதம் 18ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக கல்வியியற் கல்லூரி வட்டாரங்கள் தெரிவித்தன.

நேர்முகப் பரீட்சைக்கு தோற்றி தெரிவு செய்யப்பட்டோருக்கான அனுமதிக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அன்றைய தினம் காலை அனுமதிக்கடிதத்துடன் சமுகமளிக்குமாறும் பீடாதிபதி தி.கமலநாதன் தெரிவித்தார்.

(உ-9,104)

## ஆலயம் புனரமைப்பு

(வல்வெட்டித்துறை)

கம்பர்மலை வல்வெட்டி புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் திருப்பணியாக உள்வீதி அமைக்கப்பட்டு வருகின்றது.

எதிர்வரும் ஆடி மாதம் இவ்வாலயத்தின் வருடாந்த உற்சவம் நிகழவுள்ளதால் வேறு புனரமைப்பு பணிகளும் இடம்பெற்று வருகின்றன.

(எ-21)

## உயர் தொழில் நுட்ப நிறுவன பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவன உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா இரண்டாம் வருட பரீட்சை 16 ஆம் திகதியும்,

உயர்தேசிய கணக்கியல்டிப்ளோமா தேசிய ஆங்கில டிப்ளோமா இறுதியாண்டுப்பரீட்சைகள் 18, 19, 20 ஆம்திகதிகளிலும் நடைபெறவுள்ளதாக உயர் தொழில்நுட்பநிறுவன இயக்குநர் அறிவித்துள்ளார்.

(உ-3)

---

# பூஸாவிலுள்ள அரசியல் கைதிகள் தமிழ் எம். பிக்கள் மீது பாய்ச்சல்

(கொழும்பு)

தம்மை வந்து பார்வையிட்டு தமது விடுதலைக்காக தமிழ்எம்.பிகள் எவரும் பாடுபடவில்லை என பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் அதிருப்தியும் கவலையும் வெளியிட்டுள்ளனர்.

கடந்த சனியன்று, மனித உரிமைகள் அபிவிருத்தி நிறுவன செயலாளர் சட்டத்தரணி சாம் சமரசிங்க, மூத்த சட்டத்தரணி எம்.கந்தசாமி, காலிமாவட்டப்பாராளுமன்ற உறுப்பினரான பௌத்த மத குரு வந்தேகம சமித்ததேரோ உளளிட்ட 12 பேர் கொண்ட குழு பூஸா தடுப்பு முகாமுக்குச் சென்றது.

அங்குள்ள 135 தமிழ் அரசியல் கைதிகளைப்பார்வையிட்டு, நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்தபோதே கைதிகள் தரப்பில் இவ்வாறு கவலை தெரிவிக்கப்பட்டது.

பல வருடங்களாக விசாரணை எதுவுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள எம்மை தமிழ் எம். பிக்கள் ஒருவராவது இற்றை வரை வந்து பார்வையிடவில்லை,

அத்துடன், எமது விடுதலை வேண்டி எந்தவொரு கருத்தையும் முன் வைக்கவில்லை.

இந்த நிலையில், சிங்கள எம். பி ஒருவர் எம்மை வந்து பார்வையிட்டு எம் விடுதலைக்காக ஈடுபடப் போவதாக கூறியிருப்பது மிகுந்த ஆறுதல அழிப்பதாக உள்ளது- என்று கைதிகளின் தரப்பினால் அக்குழுவினரிடம் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, மேற்படி குழுவினர் களுத்துறை, யாழ்ப்பாணம், பதுளை அநுராதபுரம் ஆகிய சிறைச்சாலைகளில் நீதி விசாரணையின்றி நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளைப்பார்வையிட்டு, அவர்களின் விடுதலைக்காக பாடுபடவும் திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ)

# சிறுவர் உரிமை மறுத்தால் பொலிஸில் முறையிடலாம்

(யாழ்ப்பாணம்)

சிறுவர்களின்உரிமைகளைப் பெற்றோர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரும் மதிக்க வேண்டும். அவர்களின் சுதந்திரத்தை எவரும் மழுங்கடிக்கக் கூடாது. இவைகளை மீறுபவர்களுக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடுசெய்யலாம்.

இவ்வாறு கோப்பாய் கிறிஸ்'வ கல்லூரியில் கடந்தவெள்ளிக்கிழமை இடம் பெற்ற தசிறுவர்கள். பெண்கள் உரிமைகள் பாதுகாத்தல்' என்னும் விடயம் குறித்த கருத்தரங்கில் உரையாற்றிய காங்கேசன்துறை பொலிஸ்நிலைய பொலிஸ் அதிகாரி நாலிகா தெரிவித்துள்ளார்.

இக்கருத்தரங்கு கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பேனாட். டி.சில்வாவின் தலைமையில் நடைபெற்றது.

ஆசிரியர்களும் மாணவர்களும் இக்கருத்தரங்கில் பெருமளவில் கலந்துகொண்டனர்.

(எ-9)

ரூபவாஹினி கூ. தாபனத்திற்கு

# மூன்றரை இலட்சம் நாளாந்தம் நட்டம்

(கொழும்பு)

ரூபவாஹினி ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு, நாளாந்தம் மூன்றரை இலட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டு வருவதாக அதன் புதியபணிப்பாளர் தம்மிக்க கங்கநாத் திஸநாயக்க செய்தியாளர் மாநாடொன்றில் தெரிவித்துள்ளார்.

பல வருடங்களாக ஒளிபரப்புக்கூட்டுத்தாபனம்தொடர்ந்தும் நட்டத்தில் இயங்கி வருவதாகவும் திறைசேரியில் இருந்து இனி நிதி பெறமுடியாத நிலை உருவாகியுள்ளதாகவும் குறிப்பிட்ட அவர், அரசியல் தலையீடுகளற்ற பல முக்கிய மாற்றங்களை செய்து கூட்டுத்தாபனத்தை மறு சீரமைப்புச் செய்யதிட்டமிட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

(உ)

## பொதுக்கூட்டம்

(தென்மராட்சி)

தென்மராட்சிஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய கைத்தொழில் அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி பிற்பகல் 2.00மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(உ-77)

# புதுப் பொலிவு பெறும் போதனா வைத்தியசாலை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின்சுற்று மதில்களுக்கு வர்ணம் பூசப்பட்டு, முகப்புப் பகுதிகள் சீர் செய்யப்படுகின்றன.

புனர்வாழ்வு- புனரமைப்பு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன மற்றும் பிளாஸ்ரிக்சத்திரசிகிச்சைக்கானபிரிட்டன் நிபுணர் குழுவினரின் வருகையை ஒட்டியே இவ் வேலைகள் இடம்பெற்றுவருகின்றன.

இதேவேளை, வைத்தியசாலைவளாகம், நோயாளர்விடுதி என்பனவும்துப்புரவு செய்யப்படுவதைஅவதானிக்க முடிந்தது.

(உ-104)

# கண்டி மறைமாவட்ட மதகுருமார் மடு பயணம்

(கண்டி)

கண்டி மறைமாவட்ட மதகுருமார் குழுவொன்று இம்மாதம்18 ஆம்திகதிமடுசெல்லவுள்ளது.

இராணுவக்கட்டுப்பாடற்ற மக்களுக்கு வேண்டிய நிவாரணப் பொருட்களை எடுத்துச் செல்லும் இக்குழு 20 ஆம் திகதிவரை அங்கு தங்கியிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கண்டிமறைமாவட்டத்தலைவர். வணபிதா நந்தன மனதுங்க தலைமையில் செல்லும் இக் குழுவில் கண்டி மறை மாவட்ட ஆயர், கன்னியாஸ்திரிகள் மற்றும் அருட்சகோதரர்கள் அடங்குவர்

(உ)

## ஆரம்பப் பிரிவு

(மானிப்பாய்)

தற்காலிகமாக சுன்னாகத்தில் தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கிவரும் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் இந்த வருடம் முதல் ஆரம்பப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(உ-232)

செய்தித் துளிகள்

## தனியான பிரிவு

(ஏழாலை)

அரசின் நூறு நாள்வேலைத் திட்டத்தின் கீழ் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் பாலியல் வல்லுறவு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை அணுக தனியான பொலிஸ் பிரிவு இயங்கி வருகின்றது.

இந்தப் பிரிவில் தமிழ்தெரிந்த பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதால் பொதுமக்கள் எந்த சிரமமுமின்றி தமது பிரச்சினைகள் பற்றி முறையிடமுடியும்என வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-12)

## தேங்காய்கள் களவு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமராத பகுதிகளில் காணப்படும் தென்னை மரங்களின் இளம் தேங்காய்கள் களவாகப்பிடுங்கப்பட்டு வருகின்றன.

இவ்விதம் பிடுங்கப்படும் தேங்காய்கள் கைதடிச் சந்தி, மற்றும் கோப்பாய் சந்தியில் பெருமளவில்விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

(உ-77)

## சட்டவிரோதமாக மண் அகழ்வு

(தென்மராட்சி)

கைதடி நுணாவில் வயற்கரைப் பகுதியில் உள்ள வெள்ளை மணல் கட்டடத் தேவைகளுக்காக சட்டவிரோதமாக டிராக்டர்களில் ஏற்றிச்செல்லப்படுகிறது.

இதுதொடர்பாக இப்பகுதியில்தற்போதுமீளக்குடியமர்ந்துள்ள மக்கள் கிராம சேவகரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.

(உ-77)

## 5 ஆயிரம் அபராதம்

(ஏழாலை)

மல்லாகம் பகுதியில் அனுமதியின்றி மதுபானவிற்பனையில் ஈடுபட்ட ஒருவர், மதுவரிப்பரிசோதகர்களால்கடந்த வெள்ளியன்று மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது சம்பந்தப்பட்ட நபருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து பிணையில்செல்லநீதிபதி உத்தரவிட்டார்.

(உ-12)

## கைதடியில் குழாய்க் கிணறு

(தென்மராட்சி)

கனடாவில் வாழ்கின்ற தென்மராட்சி பிரதேசத்தவர்களின்நிதியுதவியுடன், கைதடி வடக்கில் குழாய்க்கிணறு ஒன்று அமைக்கப்பட்டுவருகின்றது.

இக் குழாய்கிணற்றினை எதிர்வரும் 16 ஆம் திகதி யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் சம்பிரதாய பூர்வமாகத்திறந்து வைக்கவுள்ளார்.

(உ-77)

## விண்ணப்ப படிவங்களைப் பெறலாம்

(கொழும்புத்துறை)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில், சட்டமாணி அனுமதிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க யாழ். பிராந்திய நிலையத்தினூடாக படிவங்களைப் பெற பெயர்களைப் பதிவு செய்தவர்களை, நாளை பி.ப 2.00 மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்தில் மேற்படி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு இணைப்பாளர் ச. ஞானேந்திரன் தெரிவித்தார்.

(உ-223)

## பாங்கொக் பயணம்

(தென்மராட்சி)

யுத்த அனர்த்தகாலங்களில் எவ்வாறு செயற்படுவது என்பது தொடர்பாக தாய்லாந்தின் தலைநகரான ,பாங்கொக்கில் நடை பெறவுள்ள இருவாரகால பயிற்சிப்பட்டறையில் பங்கு கொள்ளும் பொருட்டு சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் திட்ட இணைப்பாளரான எஸ். மகேந்திரன் பாங்கொக் பயணமாகவுள்ளார்.

(உ-77)

## நிதி ஒதுக்கீடு

(மானிப்பாய்)

நல்லூர் செம்மணி இந்து மயானப் புனரமைப்பு வேலைகளுக்கென வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் 5இலட்சம் ரூபாநிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த மயானத்தைப் புனரமைப்பதற்கென முதற் கட்டமாக2இலட்சத்து50ஆயிரம் ரூபா மயானத்தின் அபிவிருத்திச் சபையிடம் வழங்கப்பட்டுள்ளது.

(உ-232)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய விளையாட்டுத்துறை விஞ்ஞான நிறுவனத்தின் மூலம் நடத்தப்படும் விளையாட்டுத் துறை சம்பந்தமான டிப்ளோமா பாடநெறிக்கு இம்மாதம் 8ஆம்திகதி வர்த்தமானியில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

(உ-3)

## ஓட்டுத்திருட்டு தொடர்கிறது

(தென்மராட்சி)

மட்டுவில் பகுதியில் ஆட்களில்லாத வீடுகளிலுள்ள ஓடுகள் திருடர்களால் பட்டப் பகலில் திருடப்பட்டு அங்கேயே விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

ஒரு ஓட்டின் விலை 18ரூபா எனவும், இதற்கு நல்ல கிராக்கி இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

(உ-77)

## உளவளத் துணையாளர் இறுதிப்பரீட்சை

(வலம்வெட்டித்துறை)

சாந்திகம் உளவளத்துணை நிலையம் நடத்திவரும் உளவளத்துணையாளருக்கான குறுங்கால பயிற்சி நெறியின் இறுதிஎழுத்துப்பரீட்சை எதிர் வரும் 17 ஆம் திகதி காலை 9 மணிக்கு சாந்திக விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(எ-217)

## விவசாயிகள் விபரம் சேகரிப்பு

(மானிப்பாய்)

அண்மையில் பெய்த கடும் மழையால் பாதிக்கப்பட்ட, மானிப்பாய் மேற்கு ஜே/140 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுக்கும் வகையில் அவர்களிடம் விபரங்கள் சேகரிச்கப்பட்டு வருகின்றன.

பாதிப்படைந்த மேற்படி விவசாயிகளை இம் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பதாக விபரங்களை கடித மூலம் அறியத்தருமாறு, அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-232)

## பெறுமதிவாய்ந்த முத்திரைகளைப் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதம தபாலகத்திற்கு 500,1000ரூபா பெறுமதியான முத்திரைகள் அனுப்பி வைக்கப்பட்டுஅவை நேற்று முதல் விநியோகிக்கப்பட்டு வருவதாக பிரதமதபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ)

# இராணுவ சீருடை தரித்தோர் நீதிமன்றத்தினுள் பிரசன்னம்

## உடனடி விசாரணைக்கு உத்தரவு

(கொழும்பு)

பத்திரிகையாளர் இக்பால் அத்தாஸ் தாக்கப்பட்ட வழக்கின் தீர்ப்பு வழங்கப்படவிருந்த தினமான பெப்ரவரி முதலாம் திகதி கொழும்பு உயர் நீதிமன்ற வளாகப் பகுதியில் இராணுவச் சீருடையணிந்த 12பேர் மர்மமான முறையில் சமுகமளித்திருந்தது எவ்வாறு என்பதுபற்றி உடனடி விசாரணைநடத்துமாறு சட்டமாஅதிபர் கே.சீ. கமலசபேசன் இராணுவத் தளபதி லயனல் பலகல்லவிடம் கேட்டுள்ளார்.

அன்றைய தினம் இராணுவத்தினர் அங்கு அழைக்கப்பட்டிருக்கவுமில்லை என்பதுடன் உள்ளே அனுமதிக்கப்பட்டிருக்கவுமில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவ்விவகாரம் இராணுவத் தலைமைக்கு அறிவிக்கப்பட்டு உரிய விசாரணைஆரம்பிக்கப்பட்டிருப்பதாக இராணுவப் பேச்சாளர்சனத்கருணாரத்ன தெரிவித்தார்.

அன்றைய தினம் இனந்தெரியாத ,சிவில்உடைதரித்த ஒருவர் அங்கு தோன்றி 12 இராணுவ வீரர்களையும், ஒரு கப்டன் ,ஒருஇரண்டாம் லெப்டினன்ட் ஆகியவர்களை அங்குள்ள வாங்கொன்றில் இருக்கும்படி கேட்டாரென்றும் இந்த மர்மநடவடிக்கை பற்றி கூறப்படுகிறது.

இந்த இராணுவத்தினர் அங்கு சமுகமளித்திருப்பதற்கு எந்தவொரு காரணமும் தேவைப்பட்டிருக்கவில்லை, வழக்கின் தீர்ப்பை வேறு ஒரு திகதிக்கு ஒத்திவைப்பதாக அறிவித்ததும் அவர்கள் அவ்விடத்தை விட்டு அகன்று விட்டனர் என்று ஜனாதிபதி சட்டத்தரணி தயா பெரேரா சட்டமா அதிபருக்கு முறைப்பாடு செய்திருந்தார். இதனைத்தொடர்ந்தே சட்டமா அதிபர் இராணுவ தளபதியிடம் விளக்கம் கோரியிருக்கிறார்.

குற்றம் சுமத்தப்பட்டவர்கள் மீது தண்டனை வழங்கப்படுமானால் அத்தாசும் அவரது குடும்பமும் அழிக்கப்படும் என்று தனது உதவிச்சட்டத்தரணிக்கு அநாமதேய தொலைபேசி அழைப்புக் கிடைத்திருந்ததாகவும் சட்டமா அதிபருக்கு எழுதிய கடிதத்தில் ஜனாதிபதிசட்டத்தரணி தயாபெரேரா தெரிவித்திருந்தார்.

(உ)

## மொத்த விற்பனை வருமான வரிகளை நீக்குவது தொடர்பாக ஆராய்வு

(கொழும்பு)

நாட்டிலுள்ள சகல கூட்டுறவுச் சங்கங்களினாலும் வசூலிக்கப்படும்வியாபாரமொத்த விற்பனைவரி, வருமான வரி என்பவற்றைநீக்குவது தொடர்பாகஅரசாங்கம்ஆலோசனை நடத்தி வருவதாக கூட்டுறவு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன,

இவ்விடயம் தொடர்பாக கூட்டுறவு அமைச்சர் ஏ.ஆர். எம். அப்துல் காதர் கருத்துத் தெரிவிக்கையில்;

கூட்டுறவுச்சங்கங்களில் இவ்வரிகள் அறவிடப்படுவதனால் சங்கங்கள் பெருமளவு வருமானத்தை ஈட்டி வருகின்றனஎன்பதுடன், நுகர்வோருக்கு கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கடன்வசதி போன்றவற்றையும் ஊழியர்களுக்கு முற்பணம், வட்டியில்லாக் கடன், சம்பள அதிகரிப்பு என்பவற்றையும், கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களிற்கு பங்குஇலாபங்களை அதிகரிக்கவும்உதவியது என தெரிவித்துள்ளார்.

(உ-8)

## விளையாட்டில் பங்கேற்கும் தடைகளில் தளர்வு

(கொழும்பு)

தேசிய பாடசாலைகளில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் சர்வதேச பாடசாலை மாணவர்கள் பங்கேற்பதற்கு இவ்வளவு காலமாக இருந்து வரும் விளையாட்டுத் தொடர்பானசகலதடைகளும் நீக்கப்படும்.

நாரஹென்பிட்டியில்சாருக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற சர்வதேச பாடசாலைகள் விளையாட்டுப் போட்டிகளில் பிரதமவிருந்தினராககலந்து கொண்ட விளையாட்டுத்துறை அமைச்சர் ஜொன்சன் பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சர்வதேச பாடசாலைகளில் கல்வி கற்கும் விளையாட்டுத் திறமை மிக்க மாணவர்கள் இவ்வாறான,

போட்டிகளில் பங்குபற்றி, தடைகள் காரணமாக, தமது திறமைகளை வெளிக்காட்ட முடியாத நிலையில் இருக்கிறார்கள் எனவும்தெரிவித்துள்ளார்.

(உ-3)

## தாயால் துன்புறுத்தப்பட்ட சிறுவனை சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்க உத்தரவு

(ஏழாலை)

தாயாரால் துன்புறுத்தப்பட்ட சிறுவனை இருபாலை கானான் சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்கும்படி மல்லாகம் நீதிபதி உத்தரவிட்டார்.

வசாவிளானில் இருந்து இடம் பெயர்ந்து மானிப்பாயில் வசித்து வரும் குடும்பப் பெண் ஒருவர்தனது 11வயது மகனின் முகத்தில் நெருப்பினால் சுட்டு துன்புறுத்தியுள்ளார்.

இச் சிறுவர் துஷ்பிரயோக சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸாரின் ஊடாக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதையடுத்து,

கடந்த வெள்ளியன்று மேற்படி வழக்கு விசாரணை இடம் பெற்றபோது நீதிபதி மேற்படி தீர்ப்பினை வழங்கினார்.

(உ-12)

## கட்டாக்காலிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவாரில்லை

(தென்மராட்சி)

கச்சாய் பகுதியில் செய்கை பண்ணப்பட்டுள்ள பயிர்கள் அப்பகுதியில் கட்டாக்காலிகளாகத்திரியும் கால் நடைகளால் அழிக்கப்பட்டுவருவது குறித்து விவசாயிகள் பெரிதும் கவலை கொண்டுள்ளனர்.

இதுதொடர்பாக அப்பகுதி விவசாயிகள் தென்மராட்சி மக்கள் நலச் சேவைகள் சங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளனர்.

ஆயினும், கட்டாக்காலிகளின் நடமாட்டத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாமை குறித்துவிவசாயிகள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.(உ-10)

## 1985 இல் உருவாக்கப்பட்ட தென்மராட்சி அபி. நிறுவனத்தை மறுசீரமைப்புச் செய்ய ஏற்பாடு

(தென்மராட்சி)

தென்மராட்சியின் அபிவிருத்தி கருதி சாவகச்சேரியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் வீ.என். நவரத்தினத்தினால் 1985 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட 'தென்மராட்சி அபிவிருத்தி நிறுவனத்தினை' மறுசீரமைப்பு செய்வதற்கு தமிழர்விடுதலைக் கூட்டணியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் துரிதமான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றார்.

யுத்தத்தினால் பாழடைந்த நிலையில் இருக்கும் தென்மராட்சி பிரதேசத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கும் புனரமைப்பு, மற்றும் அபிவிருத்தி சார்ந்த செயல் திட்டங்களை அமுல் செய்வதற்கும் இந் நிறுவனம் முழு மூச்சாக ஈடுபட வேண்டிய தேவை எழுந்துள்ளது எனவும்,

இவற்றிற்கு வேண்டிய நிதியுதவியை வழங்க கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வாழ்கின்ற தென்மராட்சி பிரதேச மக்கள் தம்மிடம் உறுதியளித்துள்ளதாகவும் ரவிராஜ் எம்.பி. குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; இந் நிறுவனத்தின் மறுசீரமைப்புக் கூட்டம் மிகவிரைவில் யாழ்நகரில் இடம் பெறும்எனவும் தென்மராட்சி பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட ஆர்வலர்கள் இதில் இணைக்கப்படவுள்ளனர் என்றும் குறிப்பிட்டார்.

இந் நிறுவனம் மறுசீரமைக்கப்பட்ட பின்னர் இலங்கைப் பாராளுமன்றத்தில் சட்ட மூலம் கூட்டிணைக்கப்படும் எனவும்கூறப்படுகிறது(உ-77)

# அடிமை முறையில் அக்கறை கொண்டிருந்த சக்திவாய்ந்த குழுவே யுத்தத்திற்கு காரணம்

நாட்டு மக்களே! இரண்டாம் முறையாக ஜனாதிபதி பதவியேற்கும் இவ்வேளையில் முதலாவது தடவையில்நீண்ட சொற்பொழிவாற்ற இருந்த வாய்ப்பை விட இப்போது குறைவாகவே இருக்கிறது. எவ்வழியைப் பின்பற்றுவது என்பது பற்றிவிரிவாகஎடுத்துரைப்பது பொருத்தமானதாயும் நேர்மையானதாயுமிருந்தது. நான்கு வருடகாலம்முடிவடையும் இவ்வேளையில் புதிதாக எதையும் சமர்ப்பிக்க இயலாது.எமது ஆயுதப்பலத்தின் முன்னேற்றம் எனக்குத் தெரிந்திருப்பது போலவே, பொது மக்களுக்கும் நன்கு தெரிந்துள்ளது.அது நியாயமான அளவு திருப்திகரமாயும் யாவருக்கும் தெம்பூட்டுவதாயுமுள்ளதென்று நான் நம்புகின்றேன்.

**இன்று ஆபிரகாம்லிங்கன் பிறந்ததினம்**

### போர் மூண்டது

இற்றைக்கு நான்கு வருடங்களுக்கு முன்பு நிகழவிருந்த உள்நாட்டுப் போர் குறித்தே யாவரும் சிந்தித்துக் கொண்டிருந்தனர்.யாவரும் அதில் பீதியடைந்தனர்.யாவரும்அதைத் தவிர்க்க முயன்றனர் யுத்தமின்றி அமெரிக்க ஐக்கியத்தைக் காக்கும் நோக்குடன் இதே இடத்திலிருந்து அங்குரார்ப்பண விரிவுரை ஆற்றப்பட்டுக் கொண்டிருந்தவேளையில் யுத்தமின்றியே அமெரிக்காவை அழிக்க கலகக்காரர்கள் நகரத்தில் முயன்று கொண்டிருந்தனர். அமெரிக்காவின் ஐக்கியத்தைக்குலைத்துப் பேச்சு வார்த்தைகளின் மூலம் அதைப் பங்கு போட முற்பட்டுக் கொண்டிருந்தனர்.இருசாராரும் யுத்தத்தை வெறுத்தனர். நாடு தப்பிப் பிழைக்க அனுமதிப்பதைவிட போர் தொடுக்கவே விரும்பினர் ஒரு சாரார்.ஆனால் மற்றப் பகுதியினரோ ஐக்கியம் குலைக்கப்படுவதைவிட யுத்தத்தை ஒப்புக்கொள்வதே மேலானதெனக்கருதினர். ஈற்றில் போர் மூண்டேவிட்டது.

ஆபிரகாம்லிங்கன் 1864 ல் இரண்டாம் தவணைக் காலத்திற்கும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட போது நாடு உள்நாட்டுப்போரால் பிளவுபட்டிருந்தது. அப்போது போரின் விளைவு சந்தேகத்திற்கிடமானதாயிருந்தது.லிங்கன் மறுதடவையும்வெற்றிகரமாகத்தெரிவு செய்யப்பட்டமை போரை வெற்றிகரமான முடிவுக்குக் கொண்டுவரவேண்டுமென வடபகுதி மக்கள் கங்கணங் கட்டி விட்டனர் என்பதை எடுத்துக்காட்டிற்று. லிங்கன் 1865 மார்ச் 4 ல் பதவியேற்ற போது வடபகுதி வெற்றி பெற்று விட்டதென்பதும்போர்விரைவில்முடிந்துவிடுமென்பதும், தெளிவாகியிருந்தது.போரின் பின் அமெரிக்கர் எதிர் நோக்கும் பிரச்சினைகளை லிங்கன் தனக்குள் ஆராய்ந்தார்.தவறு தண்டனை என்ற பிரச்சினைகளை அவர் தவிர்க்க விரும்பினார்.அவ்வேளையிற்றான் அவரது உன்னதமான இலட்சியத்திற்கு கொலையாளி ஒருவனின் துப்பாக்கிக்குண்டு முற்றுப்புள்ளி வைத்தது. அன்னார் இரண்டாவது தடவையாக ஜனாதிபதி பதவியேற்றபோது ஆற்றிய சொற்பொழிவு இங்கு தரப்படுகிறது.

### அடிமை முறையில் அக்கறையுடையோர்

ஜனத்தொகையின் எட்டில் ஒரு பங்கினர் கறுப்பர்களாயிருந்தனர். அமெரிக்காவின் தென்பகுதியில்அவர்கள்குழுமி வாழ்ந்தனரேயொழிய நாடு முழுவதும் பரவலாக வாழ்ந்து வரவில்லை.ஒரு நூதனமான சக்திவாய்ந்த குழு வொன்று இவ்வடிமைகளுக்குப் பின்னிருந்து இயங்கி வந்தது. இச் சக்தி வாய்ந்தகுழுவேபோருக்குக் காரணம் என்பதையாவரும் அறிவர்.அடிமை முறையில் அக்கறை கொண்டிருந்த அக்கலகக் காரர்கள் அம்முறையைமேலும்பலப்படுத்தி நீடித்து விஸ்தரிக்கவும் போர் வாயிலாக அமெரிக்காவின்ஐக்கியத்தை உடைக்கவும் தயாராயிருந்தனர்.ஆனால் அரசாங்கமோ அந்த ஐக்கியத்தை விரிவு படுத்துவதைத் தவிர வேறு எந்த உரிமையையும் பாராட்டவில்லை. இருசாராரில் எவரும் எதிர் பாராதஅளவில், போர் ஏற்கனவே நடைபெற்றுவிட்டது போர் முடிந்ததும் அல்லது முடிவடையமுன்னரேபோருக்கான மூலகாரணம் இல்லாதொழிந்து விடுமென்று எதிர்பார்க்கவில்லை.

### இறைவன் தீர்ப்பு

இருசாராரும் இறைவனின் உதவியை வேண்டினர். இருசாராரின் வேண்டுகோள்களுக்கும் இறைவன் செவிசாய்க்க இயலாது. இருசாராருள் எவரதும் வேண்டுகோள்களும் முழுமையாக இறைவனால் நிறைவேற்றப் படவில்லை. நாம் ஒன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்திருந்தது. இறைவனின் தீர்ப்பே உண்மையானதாயும், நேர்மையானதாயும் இருக்கிறதென்றே கூறப்படவேண்டும். மூவாயிரம்ஆண்டுகளுக்கு முன்பே இவ்வாறு கூறப்பட்டிருந்தது.

எவர் மீதும் கெட்டஎண்ணமின்றியும், யாவரிடமும் கருணைகொண்டு நேர்மையில் உறுதிபூண்டு நாம் நமது கடமையைப் பூர்த்தி செய்ய முயல்வோமாக. தேசத்தின் புண்ணைச் ஆற்றுப்படுத்துவோமாக. யுத்தத்தில் புண்பட்டோர்களின் நலனைக் கவனிப்போமாக. அவர்களின் விதவைகளையும், அனாதைக் குழந்தைகளையும் கவனிப்போமாக. எம்மிடையும் சகல நாடுகளுடனும் நியாயமான, நிரந்தர சமாதானத்தை நிலை நாட்டிப்பேண எம்மாலியன்றவற்றைச்செய்யமுயல்வோமாக.

**ஆபிரகாம் லிங்கன்**
முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி

## வர்த்தகர் வீட்டில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரை அண்மித்த இராசாவின் தோட்டப் பகுதியில் வர்த்தக நிறுவன உரிமையாளர் ஒருவரது வீட்டில் சனியன்று இரவு துணிகரத் திருட்டுச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டு யன்னல் ஊடாக உள்ளே நுழைந்த திருடர்கள அங்கிருந்த உடுபுடவைகள் உட்பட பெறுமதிமிக்க பொருட்கள் பலவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

இதுபற்றி வீட்டு உரிமையாளரான பொ. வடிவேலு என்பவரால் யாழ். பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இவரது வீட்டில் அண்மையில் இடம்பெற்ற 3 வது திருட்டுச் சம்பவம் இதுவென்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-104)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயஇல்லமெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் எஸ்.சண்முககுமார் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு, யாழ் கல்வி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் த.இராஜலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.கல்வி வலய கல்வித் திணைக்கள அதிகாரி பா.சிவபாலன்,ஓய்வு பெற்ற அதிபர் மா.குலசேகரம் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள். (செ)

## 20 வருடகால யுத்தத்தில் 2 இலட்சத்திற்கும் அதிகமான கண்ணிவெடிகள் புதைப்பு

(கொழும்பு)

அரசு, விடுதலைப்புலிகள் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானதும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளை ஐ.நா. அபிவிருத்தித் திட்டம், யூனிசெவ், ஐ. நா. அகதிகள நிறுவனம் ஆகிய மூன்றும் இணைந்து செய்யவுள்ளதாக அபிவிருத்தித் திட்டத்தின் பொறுப்பதிகாரி சுல்ரானா தெரிவித்துள்ளார்.

கண்ணிவெடிஅகற்றப்பட்ட இடங்களின் மீள்குடியமர்வுக்குப் பொறுப்பான அகதிகள் நிறுவனமும் இவ்விடயத்தில் ஒத்துழைப்பினை வழங்கவுளளது.

இது தொடர்பாக சுல்ரானா, புனர்வாழ்வு, மீள் குடியமர்வுஅமைச்சர்டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனா விடமும் பேச்சுக்களைநடத்தியுள்ளார்.

இதேவேளை, அபிவிருத்தித் திட்டஅதிகாரிகள் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தி அவர்களினால் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட இடங்கள் பற்றிய விபரங்களுடன்,இனிமேல் கண்ணிவெடிகளைப்புதைப்பதில்லை என்ற சம்பிரதாயபூர்வமான உறுதிமொழியையும் பெறவுளளனர்.

கடந்த 20 வருடகாலமாக இடம்பெற்றுவரும் யுத்தத்தில் 2 இலட்சத்திற்கும் அதிகமான கண்ணிவெடிகள் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் புதைக்கப்பட்டிருக்கின்றன.

அத்துடன், 1998, 1999 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் யாழ்ப்பாணத்தின் குடியிருப்புக்கள் நிறைந்ததொழில் நுட்பக்கல்லூரிப் பகுதியில் நூற்றுக்கணக்கான கண்ணிவெடிகள் அகற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது (உ)

## ஊடகவியலாளர் பயிற்சிப் பட்டறை பாணந்துறையில்

(தென்மராட்சி)

தமிழ் ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை ஒன்று இம்மாதம் 25,26,27 ஆம் திகதிகளில் பாணந்துறையில் நடைபெறவுள்ளது.

ஜேர்மனியிலுள்ள அபிவிருத்தி நிறுவனம் ஒன்றின் அனுசரணையுடன்நடைபெறவுள்ள இப் பயிற்சிப் பட்டறைக்கு யாழ்ப்பாண ஊடகவியலாளர்களும் பங்குபற்றவுள்ளனர். (உ-77)

## முஸ்லிம் மக்கள் மீள்குடியேற்றம் முத்தரப்பின் உத்தரவாதத்தை கோருகிறார் நூர்டின் மசூர்

(கொழும்பு)

நாட்டில் நடைபெற்றுவந்த இனப்பிரச்சினைகளால்இடம்பெயர்ந்து பல்வேறுபிரதேசங்களில் வாழும் முஸ்லிம் மக்களை சொந்த இடங்களில் குடியேற்றுவதற்கு தமிழீழ விடுதலைப்புலிகளும்,அரசாங்கமும்,சர்வதேச சமூகமும் உத்தரவாதம் வழங்கவேண்டும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மகளிர் சம்மேளனத்தால் நடத்தப்பட்ட'முஸ்லிம்களும் சமாதானப்பேச்சுக்களும்என்றகருத்தரங்கில் உரையாற்றும் போது வன்னிப்பிரதேச புனரமைப்பு அமைச்சர் நூர்டின் மசூர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

போர்ச் சூழல் காரணமாக தமது சொத்துக்களை இழந்தவர்களுக்கும், அங்கவீனமானவர்களுக்கும் அரசாங்கத்தால் நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும்.

முஸ்லிம் மக்களும்இந் நாட்டில் வாழ்வதற்குரிய ஜனநாயக குடியுரிமை பெற்றவர்களே.எனவேஏனைய இன மக்களுக்கு வழங்கப்படும் அனைத்து நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவுகளும் முஸ்லிம் மக்களுக்கு வழங்கப்படவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-8)

## தேர்தல் பிரசார சுவரொட்டி ஒட்டுவதை தடுப்பதற்கு திட்டம்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில்,தேர்தல் பிரசார சுவரொட்டிகள் ஒட்டப்படுவதனை தடுப்பதற்கானதிட்டம் ஒன்றினை வகுத்துள்ளதாக தேர்தல் அலுவலகம் அறிவித்துள்ளது.

ஒட்டப்பட்ட தேர்தல் பிரசார சுவரொட்டிகளை அகற்றவும், அவற்றை மீண்டும் ஒட்டுவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கவும் அனைத்துப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் அறிவுறுத்தியுள்ளதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் அறிவித்துள்ளார்.

பஸ்களில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் அல்லது பஸ் உரிமையாளர்கள் அகற்ற வேண்டும் எனவும் பொலிஸ் தேர்தல் அலுவலகம் அறிவித்துள்ளது. (செ)

## நிர்வாகசபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். வாடகைக்கார் இயக்குநர் சங்க நடப்பாண்டிற்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

தலைவராக க. இரத்தினம் செயலாளராகஇ.செல்வராசா. பொருளாளராக க.சிங்கராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (உ-104)

## அரச அதிகாரிகளாக 150 பேர் நியமனம்

(கொழும்பு)

பொது நிர்வாக அமைச்சினால் சென்ற ஜூன்மாதம் நடத்தப்பட்ட போட்டிப்பரீட்சையின் அடிப்படையில், 150க்கும் அதிகமானவர்கள் அரச அதிகாரிகளாக நியமனம்பெறவுள்ளதாக பரீட்சை திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

இதேவேளை, இப்பரீட்சையின்பெறுபேறுகளை உடனடியாக வெளியிடுமாறு பொது நிர்வாகமுகாமைத்துவ அமைச்சர் வஜிர அபயவர்த்தனா பரீட்சை ஆணையாளரைகேட்டுள்ளார்.

அரச திணைக்களங்களில் அதிகாரிகளுக்கு வெற்றிடங்கள் நிலவுவதனாலேயே இந் நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகவும்,

நியமனம் பெறவுள்ளஅனைவரும் கடமையில் ஈடுபடுத்தப்படுவதற்கு முன்னர் ஒரு வருட காலப்பயிற்சி அளிக்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். -8

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை 2002 ஏப்ரில் 22 ஆம் திகதி முதல் ஆரம்பமாகும்.

### நேர அட்டவணை

| முற்பகல் | பிற்பகல் |
|---|---|
| **ஏப்பிரல் 22 திங்கட்கிழமை** | |
| 0900 - 1200<br>10 இணைந்த கணிதம் I | 1300 - 1500<br>09 உயிரியல் I<br>1300 . 1600<br>21 பொருளியல் I<br>பகுதி II . 1300-1500<br>பகுதி I - 1500-1600 |
| **ஏப்பிரல் 23 செவ்வாய்க்கிழமை** | |
| 0900 - 1200<br>09 உயிரியல் II<br>21 பொருளியல் II<br>பகுதி II -900-1100<br>பகுதி I -1100-1200 | 1300 - 1600<br>52 நாட்டியம்-சிங்களம் I<br>53 நாட்டியம் - பரதம் I<br>54 சங்கீதம் –சிங்களம் l<br>55 சங்கீதம் - கர்நாடகம் I<br>56 சங்கீதம் - மேலைத்தேயம் I |
| **ஏப்பிரல் 24 புதன்கிழமை** | |
| 0900 - 1200<br>10 இணைந்த கணிதம் II<br>52 நாட்டியம் சிங்களம் II<br>53 நாட்டியம் பரதம் II | 1300 - 1500<br>08 விவசாய விஞ்ஞானம் l<br>1300-1600<br>48 கிரேக்க உரோம நாகரிகம் I |
| **ஏப்பிரல் 25 வியாழக்கிழமை** | |
| 0900 - l200<br>30 கணக்கீடு I<br>51 சித்திரம் I | 1300 - 1600<br>48 கிரேக்க உரோம நாகரிகம் ,I<br>54 சங்கீதம் - கீழைத்தேயம் ll<br>55 சங்கீதம் -கர்நாடகம் ll<br>56 சங்கீதம் - மேலைத்தேயம் ll |
| **ஏப்பிரல் 27 சனிக்கிழமை** | |
| 0900 - 1100<br>01 பௌதிகவியல் I<br>0900 - 1200<br>30 கணக்கீடு II<br>51 சித்திரம் II | 1300 - 1600<br>08 விவசாய விஞ்ஞானம் ll |
| **ஏப்பிரல் 29 திங்கட்கிழமை** | |
| 0900 . 1200<br>01 பௌதிகவியல் II<br>51 சித்திரம் III | 1300 - 1600<br>24 அளவையியலும் விஞ்ஞானமுறையும் l |
| **ஏப்பிரல் 30 செவ்வாய்க்கிழமை** | |
| 0900 - 1200<br>71 சிங்களம் I<br>72 தமிழ் I | 1300 - 1600<br>24 அளவையியலும் விஞ்ஞான முறையும் ll |
| **மே 02 வியாழக்கிழமை** | |
| 0900-1200<br>71 சிங்களம் ll<br>72 தமிழ் ll | 1300-1600<br>28 மனைப் பொருளியல் I |
| **மே 03 வெள்ளிக்கிழமை** | |
| 0900-1200<br>22 புவியியல் l | 1400-1700<br>28 மனைப் பொருளியல் II |
| **மே 04 சனிக்கிழமை** | |
| 0900-1200<br>22 புவியியல் ll<br>பகுதி ll - 0900-1100<br>பகுதி I - 1100-1200 | 1300-1600<br>46 இந்து நாகரிகம் I<br>47 இஸ்லாமிய நாகரிகம் I |
| **மே 06 திங்கட்கிழமை** | |
| 0900-1200<br>22 புவியியல் III<br>பகுதி II . 0900-1100<br>பகுதி I - 1100-1200 | 1300-1600<br>46 இந்து நாகரிகம் II<br>47 இஸ்லாமிய நாகரிகம் II |
| **மே 07 செவ்வாய்க்கிழமை** | |
| 0900-1200<br>25A வரலாறு II (இந்தியா<br>25Bவரலாறு II (ஐரோப்பா<br>பகுதி II - 0900-1100<br>பகுதி I - 1100-1200 | 1300-1600<br>29 வணிகக்கல்வி I<br>பகுதி II - 1300-1500<br>பகுதி I - 1500-1600<br>84 ஹிந்தி I |
| **மே 08 புதன்கிழமை** | |
| 0900-1100<br>02 இரசாயனவியல் I<br>0900-1200<br>41 பௌத்தம் I | 1300-1600<br>25 வரலாறு I<br>பகுதி II - 1300-1500<br>பகுதி I - 1500-1600 |
| **மே 09 வியாழக்கிழமை** | |
| 0900-1130<br>12 பொதுச் சாதாரண பரீட்சை | 1300-1600<br>29 வணிகக்கல்வி II<br>பகுதி II - 1300-1500<br>பகுதி I – 1500-1600<br>84 ஹிந்தி ll |
| **மே 10 வெள்ளிக்கிழமை** | |
| 0900-1200<br>02 இரசாயனவியல் II<br>41 பௌத்தம் II | 1400-1700<br>45 பௌத்த நாகரிகம் l |
| **மே 11 சனிக்கிழமை** | |
| 0900-1200<br>07 கணிதம் l<br>11 உயர் கணிதம் l | 1300-1600<br>73 ஆங்கிலம் l |

# பொலிஸாரால் தேடப்பட்டு வரும் அனுருத்தவின் புத்திரர்கள்

# இந்தியாவுக்கு தப்பியோட்டம்?

(கொழும்பு)

கண்டி மடவளவைப் பகுதியில் பொதுத்தேர்தல் தினத்தன்று இடம்பெற்ற 10 முஸ்லிம் இளைஞர்கள்படுகொலை தொடர்பாக தேடப்பட்டு வந்த முக்கிய சந்தே நபர்கள் இந்தியாவுக்குத் தப்பியோடியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின்மகன்களான ஹெகான், ஜானக்க ஆகியோரே இவ்வாறு இந்தியாவுக்குத் தப்பியோடியுள்ளனர்.

ஏனையவர்களைப் பொலிஸார் தொடர்ந்தும் தேடிவருகின்றனர்.

இதேவேளை, பொதுஜன ஐக்கியமுன்னணியின்எம்.பிக்கள் பலர்,தேடப்பட்டு வருபவர்களை சரணடைய வேண்டும் எனக் கோரிக்கை விடுத்ள்ளதுடன்,

கட்சியின் அரசியல்நடவடிக்கைக்கு அவர்கள்பெரும்இடையூறாக இருந்து வருவதாகவும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க மேற்படிபடுகொலை தொடர்பாக முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த நேற்று முன் தினம் காலை கொழும்பு பொலிஸ் தலைமையகத்தில் உள்ள 4 ஆம்மாடியில்வைத்து பல மணிநேரம்தீவிர புலன் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டமை தெரிந்ததே.

(உ)

## நாய்களுக்கு தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச சபைக் குட்பட்டபகுதிகளில்வளர்ப்பு நாய்களுக்குவிசர்நாய்த் தடுப்பூசி ஏற்றும் பணி இன்று காலை 8.30-9.30 மணி வரை சிறிலங்கா வீதி சன சமூக நிலையத்திலும் ,மு.ப. 9.35-12.00 மணிவரை டச்சுவீதி இந்துஇளைஞர் பாலர்பாடசாலையிலும், பி.ப. 3.00-4.30மணிவரை உடுவில் இலந்தையடியிலும் நடைபெறும்.

(செ)

## ஆங்கில தேசிய டிப்ளோமா சித்தியடைந்தோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.உயர்தர தொழிநுட்ப நிறுவனத்தில் ஆங்கில தேசிய டிப்ளோமா2000ஆம்கல்வியாண்டு இறுதியாண்டுப்பரீட்சையில்.சித்தியடைந்தவர்களின் பெறுபேறுகள் பரீட்சையாணையாளரால் வெளியிடப்பட்டுள்ளன.

அதில் சித்தியடைந்தவர் பெயர்கள் பின்வருமாறு,

ஆங்கில தேசிய டிப்ளோமா (பகல்)

ரி.யசோதா, எல்.குமணன், பி.நர்மதா, எ.பகீதரன், ரி.ரதிவதனி, கே.சிறீகருணாகரன்,

ஆங்கில தேசிய டிப்ளோமா (மாலை)

ஆர். சர்மினி, பி. சுபாசினி,பி. டபிள்யு.நவராஜா.

(உ)

## தொழில்நுட்பக் கல்வி அறிவுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பாடசாலை அமைப்பில் தகவல் தொழில்நுட்பக் கல்வி அறிவிற்கான கருத்தரங்கு நாளை புதன்கிழமை தொடக்கம் 16 ஆம்திகதிசனிக்கிழமை வரை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

காலை 9.00 மணிதொடக்கம் மாலை 5.00 மணி வரை நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில், 1எ பி, சி-தரபாடசாலை அதிபர்களும் ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் தகவல் தொழில்நுட்ப அறிவுடைய இரு ஆசிரியர்களும் பங்குபற்றலாம் என மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவரஜா அறிவித்துள்ளார்'

(உ-3)

| முற்பகல் | பிற்பகல் |
|---|---|
| **மே 13 திங்கட்கிழமை** | |
| 0900-1200<br>07 கணிதம் ll<br>11 உயர் கணிதம் ll | 1300 1600<br>45 பௌத்த நாகரிகம் ll |
| **மே 14 செவ்வாய்க்கிழமை** | |
| 0900-1200<br>23 அரசியல் மூலதத்துவங்கள் l<br>பகுதி ll 0900-1100<br>பகுதி l 11-00-1200 | 1300-1600<br>73 ஆங்கிலம் ll |
| **மே 15 புதன்கிழமை** | |
| 0900-12 00<br>23 அரசியல் மூலதத்துவங்கள் ll<br>பகுதி ll 0900-1100<br>பகுதி l 1100-1200 | 1300-1600<br>57 நாடகமும் அரங்கியலும் (சிங்களம்) l<br>58 நாடகமும் அரங்கியலும் (தமிழ்) l<br>59 நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்) l |
| **மே 16 வியாழக்கிழமை** | |
| 0900-1200<br>31 வணிகப்புள்ளிவிபரவியல் l<br>57 நாடகமும் அரங்கியலும் (சிங்களம்) ll<br>58 நாடகமும் அரங்கியலும் (தமிழ்) ll<br>59 நாடகமும்அரங்கியலும் (ஆங்கிலம்) ll | 1300 -1600<br>42 இந்துசமயம் l<br>43. கிறிதவம் l<br>44 இஸ்லாம் l<br>75 சமஸ்கிருதம் l |
| **மே 17 வெள்ளிக்கிழமை** | |
| 0900-1200<br>13 பொது ஆங்கிலம் l | 1400-1630<br>13 பொது ஆங்கிலம் ll |
| **மே 18 சனிக்கிழமை** | |
| 0900-1200<br>31 வணிகப் புள்ளிவிபரவியல் ll<br>57 நாடகமும்அரங்கியலும் (சிங்களம்) lll<br>58நாடகமும் அரங்கியலும் (தமிழ்) lll<br>59 நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்) lll | 1300-1600<br>42 இந்துசயயம் ll<br>43 கிறிஸ்தவம் ll<br>44 இஸ்லாம் ll<br>75 சமஸ்கிருதம் ll |

## இராசி பலன்

12.02.2002
(தை30,செவ்வாய்)
அமாவாசை பி.ப 2.33வரை
அவிட்டம் பி.இ3.55வரை
ராகுகாலம் 3.34-5.04
நல்லநேரம் 11.04-12.34
சித்தம்

**மேடம்**
பெரியோர்மதிப்பு, காரிய அனுகூலம்,பொருள் சேர்க்கை,மனமகிழ்ச்சி

**இடபம்**
தொழில்மேன்மை, நிலை மாற்றம்,அதிகாரம், முயற்சி கைகூடும்

**மிதுனம்**
புதியதிட்டமிடல்,அச்சமானநிலை,காரியதாமதம், தொழில்கஷ்டம்

**கடகம்**
எதிர்பாராதபிரச்சினை, போசனநன்மை,காரியதடங்கல்,உடல்வியாதி

**சிங்கம்**
காரியநன்மை, வசீகரம், நண்பர்கள்சந்திப்பு, திடீர் பயணம்

**கன்னி**
தொழில்முன்னேற்றம், நோய்குணமடைதல், முயற்சி கைகூடும்,சத்துருஜெயம்

**துலாம்**
வியாபாரமுன்னேற்றம், மனச்சஞ்சலம்,முயற்சி தாமதம்,கீர்த்தி

**விருச்சிகம்**
தொழில் நன்மை,உடல் நலக்குறைவு,தாழ்ந்தசுபாவம்,காரியதாமதம்

**தனுசு**
நினைத்தகாரியம் நிறைவேறும்,வாக்குப்பலிதம், கூட்டு முயற்சி,தனவரவு

**மகரம்**
களஸ்திரசுகம்,பொருள்விரயம்,சகோதரர்உதவி,முயற்சி தாமதம்

**கும்பம்**
ஜனவசியம்,காரியம் கைகூடும்,நண்பர்கள் உதவி, சயனசுகம்

**மீனம்**
பிரயாணம், கோபப்படுதல் காரியதாமதம், திடீர்நன்மை
(பழையநேரப்படிகணிக்கப் பட்டது)

வளவன்

## இன்று ஒரு தகவல்

# கனவுகள் வருவதேன்?

சார்! நான் இந்த நாட்டுக்கு இராசாவாகி விட்டேன் என்றார் ஒருவர். எப்போது? என்று கேட்டார் இன்னொருவர். ''நேற்றிரவு தூங்கிக் கொண்டிருந்தபோது'' என்றார் அவர். அப்படியென்றால் என்ன அர்த்தம்? அவர் கனவு கண்டிருக்கிறார் என்று அர்த்தம். கனவில் தான் அது அவருக்கு சாத்தியம். இல்லையென்றால் எந்தக் காலத்தில் அவர் இராஜாவாகப் போகிறார்? சரி . . . இந்தக் கனவுகளுக்கு விஞ்ஞான பூர்வமான விளக்கம் என்ன?

நம்முடைய எதிர்பார்ப்புகள்- ஏமாற்றங்கள்- பயங்கள் -சந்தேகங்கள் எல்லாம் நம்முடைய உள் மனதில் படிந்து விடுகிறதாம். உள் மனதைத்தான் சப்கொன்-சியஸ் என்று சொல்கிறார்கள். இந்த உள்மனது நாம் விழித்துக் கொண்டிருக்கிறபோது எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை. ஆனால், நாம் தூங்குகிற பொழுது அந்த எண்ணங்கள் எல்லாம் விழித்துக் கொள்கின்றனவாம். அது தான் கனவு உண்டாவதற்கு அடிப்படையான காரணமாம், கனவுகளைப் பற்றி எவ்வளவோ ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருக்கிறது. இருந்தாலும் இன்னமும் முழுதாக அதைப் பற்றி யாரும் தெரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

சோவியத்யூனியனில் கனவுகளைப் பற்றி ஆராய்ச்சி செய்கிற நரம்பியல் மருத்துவர் கிட்டத்தட்ட 41, 000 கனவுகளை ஆராய்ச்சி செய்து பார்த்திருக்கிறார். அவர், ''சில சமயம் நல்ல கனவு வருகிறது. சில சமயம்கெட்ட கனவு வருகிறது. நல்ல கனவு வந்தால் உங்கள் உடலில் ஆரோக்கியமாய் இருக்கிறது என்பது அர்த்தம். கெட்ட கனவு வந்தால் உங்கள் உடலில் ஏதாவது நோய் இருக்கலாம். அல்லது நோயின் அறிகுறியாக இருக்கலாம்'' என்கிறார். ஆழ்ந்து தூங்குகிறபொழுது உடம்பின் எல்லாப் பகுதிகளும் பூரணமாக மூளையால் உணரப்படுகிறதாம். ஏதோ ஒரு பகுதி நோயால் தாக்கப்பட்ட அறிகுறி தெரியவருகிறதென்று வைத்துக் கொள்ளுங்கள். . . . அப்போது நரம்பு மண்டலம் வழியாக அதன் தாக்கம் கனவுகளில் வெளிப்படக் கூடிய சாத்தியம் உண்டு என்கிறார் அவர். தான் செய்த ஆராய்ச்சியிலிருந்து இதற்கு அவர் ஓர் உதாரணமும் கொடுக்கிறார். ஒரு ஆள் சரோர் . . . என்று மழை கொட்டுவதாகக் கனவு கண்டாராம். அந்த மழையில் அவர் நடந்து போய்க்கொண்டிருக்கிறார். காலில் முழங்கால் வரையும் மூடுகிற 'ஷு' அணிந்திருக்கிறார். அவர் ஒவ்வொரு அடி எடுத்து வைப்பதற்கும் மிகவும் சிரமப்படுகிறது போன்று தெரிகிறது. இப்படி ஒரு கனவு.

இந்தக் கனவு கண்டு அவர் விழித்தவுடன் பார்த்தால் உடல் முழுவதும் பாரமாக இருக்கிறது. காலில் வலியிருக்கிறது. இதிலிருந்து என்ன தெரிகிறது? கனவில் கண்ட காட்சிதான் உடலில் அந்த வலியை ஏற்படுத்தியிருக்கிறது இதனால் உறக்கத்தில் இருக்கிற போது உடலில் எல்லா உறுப்புகளும் கனவுடன் சம்பந்தப் பட்டிருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. ஆனால் ஒரு விஷயம் எல்லாக் கெட்ட கனவுகளுமே நோயின் அறிகுறிதான் என்று சொல்லிவிட முடியாது. அதனால் ஏதாவது கனவு கண்டுவிட்டு உடலில் என்ன கோளாறு என்று தேடிக் கொண்டிருக்க வேண்டாம். ஏனென்றால், முன்பு சொன்னது மாதிரி உள் மனதின் பயம், துக்கம், வசதி குறைவான தூக்கம் எல்லாம் கூட கெட்ட கனவுகளை உண்டாக்கலாம்.

அதே மாதிரி சிலருக்கு உடலில் எந்தவித கோளாறும் இருக்காது. ஆனால் அவர்களுக்கும் சில பயங்கரமான கனவுகள் வரும். இதற்கு என்ன காரணம் தெரியுமா? அவர்கள் சரியான காரணமில்லாமல் ஆத்திரப்படுகிற ஆசாமிகளாக இருப்பார்கள். ஏனென்றால் அதிகமாகக் கோபப்படுகிற போது நரம்புகள் பாதிப்படையும். அப்படி ஆனதென்றால் அது பயங்கரமான கனவுகளை உண்டாக்கும். இப்படிப்பட்டவர்களுக்கு முடிவே இல்லாத தொடர்ச்சியான கனவுகள் வருவதற்குக் கூட வாய்ப்பு உண்டாம். கனவுகளைப் பற்றிஏன்முழுதாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை என்றால் அது நம்மிடம் வருகிற நேரம்-நாம் தூங்குகிற நேரம் விழித்துக் கொண்டபின் கனவில் கண்டதை முழுமையாகச் சொல்ல முடியாமையே.

சில கனவுகள் ஞாபகத்தில் தங்குவதில்லை. தூக்கத்தில் கண்டவற்றை தூக்கத்தோடு விட்டுவிடுவதுதான் நல்லது. இராசிபலன் பார்க்கிறமாதிரி கனவுக்குப் பலன் என்னவென்று பார்த்து விட்டு வீணாகக் கவலைப் பட்டுக் கொண்டிருக்காதீர்கள். நேரம்தான் வீண். நல்லகனவு கண்டால் நாலுபேரிடம் சொல்லிச் சந்தோஷப் படுங்கள். கெட்டகனவு கண்டால் 'கம்' என்று இருந்து விடுங்கள்.

ஒருவர் இன்னொருவரைப் பார்த்துச்சொன்னார்! சார்! நேற்றிரவு நீங்கள் என்கனவிலே வந்து என்னிடம் நூறு ரூபா கடன் வாங்கினீர்கள் என்றார். அப்படியா? அப்படியென்றால் அதைக்கண்டிப்பாக நான் வட்டியுடன் திருப்பிக் கொடுப்பேன், நீங்கள் தயவுசெய்து மறுக்காமல் அதை திருப்பி வாங்கிக் கொள்ள வேண்டும் என்றார் அவர். இவருக்கு நிஜமாகவே மிகவும் சந்தோஷம், கனவிலே கொடுத்த பணத்தை இவர் திருப்பித் தருகிறேன் என்கிறாரே என்று மிகவும் ஆவலுடன், எப்போது கொடுக்கப் போகிறீர்கள்? என்று கேட்டார். 'மறுபடியும் நான் உங்கள் கனவில் வருகிறபோது' என்றார் அவர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# இரண்டு வீதமான இலவச பாடப்புத்தகங்கள் மாத்திரமே இன்னும் விநியோகிக்கப்படவில்லை

### கல்வி வெளியீட்டுத் திணைக்கள பிரதி ஆணையாளர்

(தென்மராட்சி)

யாழ். குடாநாட்டு பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான இலவச பாடப் புத்தகங்களில் இதுவரை 98 சதவீதமானவை விநியோகிக்கப்பட்டுவிட்டன. மீதியான இரண்டு சதவீதமான புத்தகங்கள் மிக விரைவில்வழங்கப்படும்.

யாழ்ப்பாணத்துக்குவிஜயம் செய்துள்ள கல்விவெளியீட்டுத் திணைக்களத்தின் பிரதி ஆணையாளரான என். ஹச்சுமுகமட் யாழ். மத்திய கல்லூரியில் நேற்று முன்தினம்நடத்திய செய்தியாளர்மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

இலவச பாடப் புத்தகங்கள் விநியோகம் தொடர்பாக பிரதி ஆணையாளர் கச்சிமுகமட் மேலும் தெரிவிக்கையில்; யாழ்குடாநாட்டுக்குத்தேவையான 6 லட்சத்து99ஆயிரத்து 250 புத்தகங்களில் இதுவரை 6 லட்சத்து 84 ஆயிரத்து 613 புத்தகங்கள்கிடைக்கப்பெற்று ஐந்துவலயங்களுக்கும் விநியோகிக்கப்பட்டு விட்டன.

இப்புத்தகங்களை திணைக்களம் வருட ஆரம்பத்திலேயே மாணவர்களுக்கு விநியோகிக்க விரும்பியிருந்த போதிலும், கப்பல் வசதியில் ஏற்பட்ட தாமதத்தினாலேயே இச்சிறியதாமதம்ஏற்பட்டது, இருப்பினும்கூடஅடுத்தவருடஆரம்பத்திலேயே இலவச பாடப்புத்தகங்கள் விநியோகிக்கப்படும் என உறுதியளித்திருந்தார்.

மேலும், முழுநாட்டுக்கும் தேவையான 21 மில்லியன் பாடப்புத்தகங்கள் 800 மில்லியன் செலவில் அச்சிடப்பட்டு மாணவர்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்படுவது பற்றியும் குறிப்பிட்டதுடன், இத்தகைய பாரிய செலவில் அச்சிடப்படும் புத்தகங்களைமாணவர்கள் கவனமாகப் பாவிக்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகும் என்றும் கூறினார்.

இச்செய்தியாளர் மாநாட்டில் யாழ் மத்திய கல்லூரியின் அதிபர் க. இராசதுரையும் சமுகமளித்திருந்தார். (உ-77)

## பொங்கல் விழா

(தென்மராட்சி)

கைதடி வாழ்மக்களின் ஏற்பாட்டில் எதிர்வரும் 16ஆம் திகதி கைதடியில் பொங்கல் விழா நடத்தப்படவுள்ளது.

இவ்விழாவில் தமிழர் கூட்டமைப்பின் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான நடராஜா ரவிராஜ், மாவை. சேனாதிராஜா ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். (உ-77)

## பார்த்தீனியம் அழிப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மானிப்பாய் வீதி மற்றும் கைதடிப் பகுதியில் நன்கு செழித்து வளர்ந்திருந்த பாதீனியங்களை அழிக்கும் நடவடிக்கை நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இ. செ. ச. கோப்பாய் பிரிவுத் தொண்டர்கள், லயன் கழகத்தின் மற்றும் கோப்பாய் பகுதி கிராம சேவகர்கள், அப்பகுதி சனசமூக நிலையங்களின் உறுப்பினர்கள் பொதுமக்கள் ஆகியோர் இணைந்து இப்பணியை மேற்கொண்டனர். (உ-9)

## சிப்பாயின் முயற்சிக்கு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பகுதியில் குடும்பப்பெண்ணை பாலியல் வல்லுறவுக்குட்படுத்த இராணுவச் சிப்பாய் எடுத்த முயற்சியைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாக சாவகச்சேரிப்பிரதேசசபைத்தலைவர் அன்ரன் பொன்னையா கண்டனம் வெளியிட்டுள்ளார்.

சமாதானக்கதவுகள் திறந்து இருதரப்பும் அமைதி முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றபோது இது போன்ற சம்பவங்கள் அருவருக்கத்தக்கவை யென்றும் இனிமேல் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவதை தவிர்க்கவேண்டுமென்றும் அன்ரன்பொன்னையா மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## தப்பியோட முற்பட்ட இராணுவ வீரர் பிடிபட்டார்

(கொழும்பு)

ரணே கொடே இராணுவ முகாமில் இருந்து ரி-56 ரக துப்பாக்கியுடன் தப்பி ஓட முனைந்த இராணுவ வீரர் ஒருவரை உயரதிகாரிகள் மடக்கிப்பிடித்துள்ளனர் இச்சம்பவம் சனிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளன.

தப்பியோட முயன்ற இராணுவ வீரரிடம் இருந்து 36 துப்பாக்கிகள் கைப்பற்றப் பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் தற்போது மகாவெல பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் (வ)

# பொருள் அபகரிப்பில் ஐவர் சந்தேகத்தில் கைது

(கொழும்பு)

தொழில் வாய்ப்பு பெற்றுக் கொடுக்கும் நிறுவனம் ஒன்றினுள் புகுந்து துப்பாக்கி முனையில் தொழில் உபகரணங்கள், சமையல் பாத்திரங்கள் மற்றும் முக்கிய ஆவணங்கள் முதலியவற்றை அபகரித்துச் சென்றார்கள் என்ற சந்தேகத்தில் 5 பேரைப் பொலிஸார் துப்பாக்கிகளுடன் கைது செய்துள்ளதாக அரச தகவல்திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 7 ஆம் திகதி இரவு 8 மணியளவில் மட்டக்களப்பு ஒந்தாச்சி மடம்பகுதியில் நடந்த இச்சம்பவம் பற்றி மேலும் அறியப்படுவதாவது;

மேற்படி பகுதியிலுள்ள தொழில் வாய்ப்பு பெற்றுக் கொடுக்கும்நிறுவனத்திற்குள் இரவு 8 மணியளவில் 5 பேர் ரி - 56 ரக துப்பாக்கியுடன் நுழைந்துஅங்கிருந்த நிர்வாக உத்தியோகத்தரின் கட்டுப்பாட்டை மீறி பலவந்தமாக மேற்குறிப்பிடப்பட்ட பொருட்களை அபகரித்துச் சென்றார்கள்.

இதுகுறித்து களுவாஞ்சிக்குடி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார், இச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள என்ற சந்தேகத்தின் பேரில் 5 பேரை ரி - 56 ரக துப்பாக்கிகளுடன் கைதுசெய்து காவலில் வைத்து விசாரணையை மேற்கொண்டுவருகிறார்கள். (எ)

# பொ. ஐ. மு. ஆட்சியில் நிறுவனங்களில் நிகழ்ந்த குழப்பங்களை ஆராய குழு

(கொழும்பு)

பொதுஜனஐக்கிய முன்னணியின் 7 ஆண்டுகால ஆட்சிக்காலத்தில் தனியார் மயப் படுத்தப்பட்ட நிறுவனங்கள், அமைப்புகள் என்பனவற்றில் இடம்பெற்ற சர்ச்சைகள் குழப்பங்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இதற்கான பணிப்புரையை பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பனவுக்குவழங்கியுள்ளார்.

இதனடிப்படையில் பெருந்தெருக்கள் திணைக்களத்தினால் கொழும்பு - கட்டுநாயக்கா நெடுஞ்சாலை அமைப்பு தொடர்பாக கேள்விப்பத்திரங்களை வழங்கியதில் இடம்பெற்ற முறைகேடுகள் உட்பட ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் நிறுவனம் தனியார் மயமாக்கப்பட்டமை, தொலைக்காட்சி அலைவரிசை பிரச்சினைகள், போன்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயங்கள் தொடர்பாக விரிவானவிசாரணையை நடத்துவதற்கு சட்டத்தரணி, கணக்காளர், ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி உள்ளிட்ட குழுவொன்றை மாரப்பன நியமித்துள்ளார். (உ-8)

## சிந்தனைக்கு விருந்து

### அழிவுகள் தோன்றுவதேன்

கலிலியோ போன்ற பலர் கண்டபல உண்மை
நிலையான நன்மைகளை நல்கி - நிலவுலகை
மேன்மையுற வைத்தாலும் மிக்க அழிவுகளும்
தோன்றுவதேன்? சொல்வாய் துணிந்து.

'பழையவன்'

# தென்மராட்சிப் பகுதியில் என்றுமில்லாதவாறு பன்றிகள் அட்டகாசம்

(தென்மராட்சி)

மட்டுவில், சரசாலை பகுதிகளில் பன்றிகளின் அட்டகாசம் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளதாக அப்பகுதியில் மீளக்குடியேறியுள்ள மக்களால் புகார் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள மரக்கறிபயிர்வகைகளை இவை அன்றாடம் அழித்து வருவதனால் விவசாயிகள்பெரிதும் நட்டமடைந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (உ-77)

# உலக தரிசனம்

## அமெரிக்க பத்திரிகையாளர் விடுவிக்கப்பட்ட செய்திக்கு பாகிஸ்தான் அதிகாரி மறுப்பு

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் கடத்தப்பட்ட அமெரிக்கப்பத்திரிகையாளர் டானியல் பேளை கடத்தல் குழுக்களிடமிருந்து மீட்டு, பிரிட்டனுக்கு அனுப்பி வைக்கப்பட்டுளளதாக சில பத்திரிகைகள் வெளியிட்ட செய்தியினை பாகிஸ்தான் அதிகாரி ஒருவர் மறுத்துள்ளார்.

பாகிஸ்தான் நாட்டின் 'டோன்' என்றபத்திரிகைநிறுவனம் பேள் விடுதலையாகி பாகிஸ்தான் சர்வதேச விமானநிலையம் மூலம் லண்டனுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார் என்றசெய்தி தொடர்பாக கருத்துத்தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில். 'வோல்ஸ்ரீட் ஜேர்னல்' என்ற பத்திரிகையின் செய்தியாளர் பேள் இன்னமும் விடுவிக்கப் படவில்லை என்றும், அவரை கண்டுபிடிக்கும் முயற்சியில் பாகிஸ்தானிய பொலிஸார் தீவிரதேடுதலில்ஈடுபட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (க-08)

## ஜப்பானில் நிலநடுக்கம்

(டோக்கியோ)

கிழக்கு ஜப்பான் பிரதேசத்தில் இன்றுகாலை சிறு அளவிலான நில நடுக்கம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. மேற்படி நில நடுக்கமானது, 5.2 றிச்டர் அளவு பதிவாகியுள்ளது.

இந்நிலநடுக்கம் தொடர்பான உயிர்ச்சேதங்கள், பொருட்சேதங்கள் தொடர்பான எந்தவொரு தகவலும் இதுவரை கிடைக்கவில்லை. (உ-8)

## அமெரிக்காவுடன் மீளப் பேச்சு நடத்த வடகொரியா தயார் தூதர் தெரிவிப்பு

(ப்யொங்யொங்)

அமெரிக்காவுடன்எந்தநேரத்திலும் மீள பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு வடகொரியா தயார் என ஐ.நாவுக்கான வடகொரியத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

அணு ஆயுதங்களை உற்பத்தி செய்து விற்பதன் மூலம் உலகின் தீமையின் அச்சாணி நாடுகளில் ஒன்று என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷினால் வர்ணிக்கப்பட்டபோதிலும் வடகொரியா பேச்சுவார்த்தை நடத்த முன்வந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சமத்துவம் முன்நிபந்தனையற்ற வகையில் வடகொரியாவுடன் பேச்சுவார்த்தைகளைநடத்த அமெரிக்காவிருப்பம்கொண்டால், புஷ்ஷின் வார்த்தைப் பிரயோகம் பெரிது படுத்தத்தக்கதுஅல்ல எனதூதுவர் மேலும் தெரிவித்துள்ளார் (க-08)



## விளையாட்டு செய்திகள்



பங்களாதேஷ் கிரிக்கெட் அணி

## டெஸ்ட் அந்தஸ்தை இழக்கும் அபாயம்

(டாக்கா)

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி டெஸ்ட் அந்தஸ்தை இழக்கும் நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு டெஸ்ட் அந்தஸ்த்தைப் பெற்ற இவ் அணி தொடர்ந்து விளையாடிய 11 டெஸ்ட் போட்டிகளில் 10போட்டிகளில் தோல்வியைத் தழுவியதுடன் ஒரு போட்டி சமநிலையில் முடிந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதன் ஊடாக டெஸ்ட்அந்தஸ்த்தை பெற்ற பலமிக்க அணிகளுடன் மோதும் வலுவான நிலையில்பங்களாதேஷ் அணி இல்லை என்பதனால் இதன் டெஸ்ட் அந்தஸ்த்தை நிறுத்துமாறு பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (செ-10)

## மெய்வல்லுநர் தரப்படுத்தல் வரிசையில் சுசந்திகா எட்டாமிடம்

(கொழும்பு)

உலக மெய்வல்லுநர் தரப்படுத்தலில் 'சுசந்திகாவுக்கு' எட்டாவது இடம் கிடைத்துள்ளது.

சர்வதேச மெய்வல்லுநர் விளையாட்டு சம்மேளனத்தால் தரப்படுத்தப்பட்டுள்ள இவ்வருடத்துக்கான மெய்வல்லுநர் வீரர், வீராங்கனைகளின வரிசையிலேயேஇவரது பெயர் இடம்பெற்றுள்ளது.

இதில் இலங்கையின் குறுந்தூர ஓட்ட வீராங்கனையான சுசந்திகா ஜயசிங்க அந்த தரப்படுத்தலின் வரிசையின் படி 200 மீட்டர் (பெண்கள்) ஓட்டப்பந்தய வீராங்கனைகளில் சர்வதேச மட்டத்தில் எட்டாவதுஇடத்தினைப் பிடித்துள்ளார். அத்துடன் 100 மீட்டர் ஓட்டத்தில் 16 இடத்தினையும் பிடித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (செ-10)

### மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சென்.பெனடிக்றோ.க.த.க.வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப 2.00மணிக்கு அதிபர் அருட்சகோதரி எம். தேவநேசம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக அருட்திரு ஜீவேந்திரா போல் அடிகளாரும், சிறப்பு விருந்தினராக யா.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அதிபர் வி.மாணிக்கமும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-9)

## திபெத்திய தலாய்லாமாவின் அனுதாபிகளுக்கு பொது மன்னிப்பு

### சீனா அரசு அறிவிப்பு

(பீக்கிங்)

வெளிநாடுகளில் தங்கியிருக்கும் திபெத்திய தலாய்லாமாவின் ஆதரவாளர்களுக்கு சீனா, பொதுமன்னிப்பு வழங்கியுள்ளது.

சீனாவில் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் திபெத்திய பிராந்தியக் குழுவின் துணைச் செயலாளர் பாசாங் இதுபற்றித் தெரிவிக்கையில்,

இந்தியா மற்றும் இதர வெளிநாடுகளில் தங்கியுள்ள திபெத்திய தலாய்லாமா ஆதரவாளர்கள் உடன் நாடு திரும்பும் பட்சத்தில் அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்படும்.

பிரிவினைவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தாலும் நாட்டுப் பற்றுடையவர்கள் என்ற ரீதியில் மீண்டும் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தியாவில் சுமார் ஒரு இலட்சம் திபெத்தியர்கள் உள்ளதும், பிறநாடுகளில் தங்கியிருந்த 408 திபெத்தியர்கள் கடந்த வருடம் நாடு திரும்பியதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## அரபாத்துடனான உறவை முறித்துக் கொள்ள புஷ் முன்வரரார்?

(வாஷிங்டன்)

தீவிரவாத பலாத்காரத்தை நசுக்குமாறு அரபாத் அரசு மீது நிர்ப்பந்தம் ஏற்படுத்த விருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி புஷ் கூறியுள்ள போதிலும்.

இஸ்ரேலியப் பிரதமர் கோரியபடி அரபாத்துடனான உறவை முறித்துக் கொள்ள முன்வரமாட்டார் எனக் கருதப்படுகிறது.

இதேவேளை அரபாத்துடன் புஷ் இன்னும் பேச்சுக்கள் நடத்தாமல் இருப்பதுகுறித்து அரேபியர்களும் ஐரோப்பிய அதிகாரிகளும் கண்டனம் தெரிவித்துள்ளனர். (உ)

## உலகிலே அமெரிக்கா சாத்தான்களின் பேரரசு வடகொரியா வர்ணனை

(சியோல்)

வடகொரியா அமெரிக்காவை 'சாத்தான்களின் பேரரசு,என்று வர்ணித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் அண்மையில் ஈராக்,ஈரான் ஆகிய நாடுகளுடன் வடகொரியாவையும் சேர்த்து' தீமையின் அச்சு' என்று வர்ணித்திருந்தார்.

அதுகுறித்து வடகொரியா கடுமையான கண்டனம்வெளியிட்டுவரும் வேளையில் கொரியா அரசின் உத்தியோகபூர்வ செய்தி நிறுவனமான கே சி.என்.ஏ.அமெரிக்காவிற்கு பதிலடியாக' சாத்தான்களின் பேரரசு' என்றுவர்ணித்துள்ளது.

உலகின் சமாதானத்தைச் சீர்குலைக்கும் வகையில் பெருமளவு ஆயுதங்களை அமெரிக்கா உற்பத்தி செய்து வருவது இந்தக் கூற்றுக்கு மிகவும் பொருத்தமானது என்று கே.சி.என்.ஏ.குறிப்பிட்டுள்ளது. (எ)

## பாக். தூதரக ஊழியர் திருப்பி அனுப்பப்பட்டார்

### நேபாளத்தில் சம்பவம்

(காட்மண்டு)

போலிநாணயத் தாள்களை மாற்ற முற்பட்ட குற்றச்சாட்டின்பேரில் கைது செய்யப்பட்ட பாகிஸ்தானின் தூதரக ஊழியர் பாகிஸ்தானுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் நாட்டவரான சிரோஜ் அகமத் சிரேரான் நேபாளத்தில் இந்திய ரூபா தாள்களையும் அமெரிக்க, டொலர்களையும் மாற்ற முயன்றபோது சென்ற மாதம் 3ம் திகதி கைதுசெய்யப்பட்டார்.

தொளாயிரத்தி இருபது டொலர், 47 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்திய போலி ரூபா நோட்டுக்களை மாற்ற முற்பட்டபோதே இவர் கைதுசெய்யப்பட்டார். (க-08)

## பெண்களை இழிவு செய்யும் ஆண்களுக்கு இராட்சதன் விருது

(புதுடில்லி)

பெண்களை இழிவுபடுத்தும் ஆண்களுக்கு 'ராட்சதன்' விருது வழங்கி மும்பை தேசிய பெண்கள் சங்கம் ஆண்களைப் பழி தீர்த்து வருகிறது.

பெண்களை இழிவு படுத்தும் ஆண்களுக்கு மராட்டியா மாலநிலத் தலைநகர் மும்பையைச் சேர்ந்த தேசிய பெண்கள் ஆணையம் துரியோதனன் விருது வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

வர்த்தக நிறுவனங்கள், பத்திரிகைகள், விளம்பர நிறுவனங்கள் மற்றும் சினிமாத் தயாரிப்பாளர்கள் இந்த விருதுபெறத் தகுதிபடைத்தவர்களாவர். (உ)

## தீவிரவாதிகள் வீசிய கைக்குண்டு வெடித்து பன்னிருவர் படுகாயம்

இந்தோனேசியாவில் எல்வி மாகாணத்தில் தீவிரவாதிகள் வீசிய கைக்குண்டு ஒன்று வெடித்ததில் 12 பேர்படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கத் தூதுவர்றபேல் இருநாள் விஜயத்தின் போது இம் மாகாணத்திற்கு வரவிருந்தஇரு மணித்தியாலங்களுக்கு முன்பே இக் குண்டு வெடித்துள்ளது. (உ-8)

## சோனியாவுக்கு அக்கறையில்லை

(புதுடில்லி)

சோனியா காந்தி வெளிநாட்டுப் பெண் அவருக்கு நாட்டின்மீதுஅக்கறையில்லையென்று இந்தியப் பிரதமர் வாஜ்பாய் கூறியுள்ளார்.

பஞ்சாப்மாநிலத்தில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு காங்கிரஸ்கட்சியைக் கடுமையாகச் சாடிப் பேசிய வாஜ்பாய்,

சோனியாகாந்தி ஒருவெளிநாட்டுப் பெண் என்ற வகையில் மதிப்பளிக்கப்பட வேண்டியவர்.

ஆனால்,அவரது சமீபத்தைய பேச்சுக்களைப் பார்த்தால் எனதுதலை வெடித்துவிடும்போல் உள்ளது என்று குறிப்பிட்டார். (உ)

## பத்திரிகையாளர் கடத்தல்

(புதுடில்லி)

பாகிஸ்தானில் அமெரிக்கப் பத்திரிகையாளர் டானியல் பேள கடத்தப்பட்ட விவகாரத்தில் இந்தியாவுக்கும் பங்குண்டு என்று பாகிஸ்தான் ஜனாதிபதி பெர்வேஷ் முஷாரப்பின் குற்றச்சாட்டினை அமெரிக்க அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

இவ்வாறான பொய்யான தகவல்களை பாகிஸ்தான் வெளியிடுவதன் மூலம் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயுள்ள விரிசல்கள் மேலும் வலுவடைந்து செல்வதற்கான வாய்ப்புகளை பாகிஸ்தான்ஏற்படுத்திச் செல்கின்றதுஎன அமெரிக்க அதிகாரிமேலும் தெரிவித்துள்ளார். (உ-8)

## பரிசோதனை வெற்றி

(புதுடில்லி)

விண்வெளியில் ஏவுகணைகளை இலகுவாக செலுத்துவதற்கு உபயோகிக்கப்படும்அதிசக்திவாய்ந்த இயந்திர மனிதர்களை பயன்படுத்துவது தொடர்பான பரிசோதனை முயற்சியில் இந்தியா வெற்றியீட்டியுள்ளது.

தமிழ் நாட்டின் கன்னியாகுமரி தேசத்தில் கடந்த சனிக்கிழமைஇப்பரிசோதனை முயற்சிநடைபெற்றதாகதெரிவிக்கப்படுகிறது.

வெற்றிகண்ட இச்சோதனை, முயற்சியில் பிரான்ஸ், சீனா மஸ்கோ போன்ற நாடுகளும் இணைந்து செயற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-8)

பொச்சாப்பார்க்(கு) இல்லை
புகழ்மை: அதுவுலகத்(து)
எப்பால்நூலோர்க்குந்துணிவு
- குறள்

## வலம்புரி

### அவிழாத முடிச்சுகள்

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்னதாக விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கக்கூடாது என்ற சாரப்பட மல்வத்த மகாநாயக்கர் ரம்புக்கல விபசி தேரர் தம்மைச் சந்தித்த யாழ் படைத்தளபதி மேஜர் ஜெனரல் விஜயசிறியிடம் கூறியுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்னதாகத் தம் மீதான தடையை நீக்குமாறு விடுதலைப் புலிகள் கோருவது நியாயமல்ல என்பது தேரரின் வாதம்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் காலத்தில் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகள் புலிகளின் தடையை நீக்காததன் காரணத்தால் தோல்வி கண்டதை மல்வத்த மகாநாயக்கர் தெரியாதவரல்ல. அப்படியிருந்தும் புலிகளின் தடையை நீக்கக்கூடாதென்பது அவரின் வாதம். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முற்படுகின்ற போதெல்லாம் ஏதோவொரு வகையில் தடைபோடுவதில் பௌத்த மகா சங்கம் முன்னிற்பது வரலாற்று உண்மை.

அந்தக் கைங்கரியத்தையே இப்போதும் மல்வத்த மகாநாயக்கர் செய்ய முன்வந்துள்ளார். விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்காது போனால் சமாதானப் பேச்சு என்பதற்கே இடமில்லை. அதேநேரம் சமாதானப் பேச்சை முன்னெடுப்பதற்காக புலிகள் மீதான தடையை நீக்க அரசு முன்வந்தாலும் பௌத்த மகாசங்கம் ஒருபோதும் அதனை அனுமதிக்காது.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு உத்தேச அரசியல் அமைப்பை பாராளுமன்றத்தில் கொண்டு வந்த போது அதனை எதிர்த்து நடுவீதியில் உண்ணாவிரதம் இருந்தவர் ஓர் பௌத்த தேரர். உத்தேச அரசியல் அமைப்பை தீயிட்டுக் கொளுத்தியவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினர்.

பௌத்த பிக்குவின் உண்ணாவிரதத்தை ஊக்குவிப்பதாக-அதனை நியாயப்படுத்துவதாக நடந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி இவ்வளவு விரைவாக ஆட்சி ஏறும் சந்தர்ப்பம் தனக்குக் கிடைக்குமென எதிர்பார்க்கவில்லை.

இந்நிலையில் சமாதான முயற்சியில் அவிழாத முடிச்சுகள் இருக்கும் வரை சமாதானம் என்பது ?.?.?

# சித்தமருத்துவத்தில் முதலிடம் பெறும் நோய் தீர்க்கும் 'ரிஷி' மூலிகை

(நேற்றைய தொடர்ச்சி)

- ரிஷி உயர்இரத்தஅழுத்தம் குறைந்த அழுத்தத்தைகட்டுப்படுத்தி சீராக்குகிறது.
- ரிஷி ரொமாடிக் மூட்டு வலிகளுக்கு சிறந்தது.

ரிஷியில்அடங்கியுள்ள உயிர் சத்துக்கள்

- பாலில் சாக்ரைட்
- ஆர்கானிக் ஜெர் மேனியம்
- மாரடைப்பு
- இரத்தசோகை (அனிமியா)
- நாள்பட்ட ஜலதோஷம்

ஜீரண மண்டலம்

- வயிற்றுப்போக்கு
- குடல் வயிற்றுப்புண்கள் (அல்சர்)
- வாயில் குழிப்புண்
- ஈரல்நோய்
- இரத்தத்தில் உள்ள கொழுப்பை ரிஷி நீக்குகிறது

## மருத்துவ விளக்கம்

- அடினோசைன்
- டிரைட்டர் பினாயிட்ஸ்
- கானோடெரிக் எசன்ஸ்
- புரோட்டின்கள்
- நார் சத்துக்கள்
- அமினோ அமிலங்கள்
- வைட்டமின்கள்
- கனிமச் சத்துக்கள்

அடாப்ட ஜென்களின் அரசன் ரிஷி

1. நச்சுத்தன்மை, பக்கவிளைவுகள் இல்லாதது.
2. உடலில் உள்ள செல்களின் மீது செயற்படக்கூடியது
3. உடல், மன செயற்பாடுகளை சமன் படுத்துவது

அனைத்து பிரச்சினைகளுக்கும் ஒரே தீர்வு ரிஷி

சுவாச மண்டலம்

- ஆஸ்துமா
- நாள்பட்ட காசநோய்
- நாள்பட்ட இருமல்

நரம்பு மண்டலம்

- இன்சோம்னியா (தூக்கமின்மை)
- நரம்புகள் செயலற்றுப் போதல்
- பிரச்சினைகளால் ஏற்படும் மன அழுத்தங்கள்
- சோர்வுத் தன்மை
- அடிக்கடி தலைவலி
- பல்வலி
- கண்புரை (கேட்ராக்ட்)
- தசைகள் இறுகிப் போதல்
- ஞாபகசக்திகுறைவு

இரத்தஓட்ட மண்டலம்

- உயர் ரத்தஅழுத்தம்
- குறைந்த ரத்தஅழுத்தம்
- இரத்தக்குழாய் சம்பந்தப்பட்ட இதய நோய்கள்
- இரத்தக்குழாய்அடைப்பு
- சீரில்லாத இதய துடிப்பு
- குறைந்த உடல்எடை
- ரிஷி பசியை அதிகரிக்கிறது
- சர்க்கரைநோய்
- மலச் சிக்கல்
- சிறுநீரகக் கற்கள்

தோல்

- தோல் முதிர்வடைதல்
- தோலில் அருவருப்பான புள்ளிகள் தோன்றுதல்
- பரு
- முடிஉதிர்தல்
- படர்தாமரை

கழிவுமண்டலம்

- சிறுநீரக கோளாறுகள்

பெண்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்

- மாதவிலக்கு சம்பந்தப்பட்டபிரச்சினைகள்
- ஒழுங்கற்ற மாதவிடாய்
- கர்ப்பப்பை கோளாறுகள்

இனப்பெருக்க மண்டலம்

- பிறப்புறுப்பு விறைக்காமை
- உடல் உறவில் விருப்பமின்மை
- மாதவிலக்குக் கோளாறுகள்

ரிஷிஏன் தனிச்சிறப்பு பெற்றதாக உள்ளது?

ரிஷி சத்துணவு வகைகளில் ஓர் உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளது. ரிஷி மேற்கு, கிழக்கு நாடுகளின் கடந்த 5000 ஆண்டு கால அறிவு மற்றும் விவேகத்தின் சங்கமத்தில் பிறந்ததாகும். ஜப்பான், தாய்வான், சீனா, அமெரிக்கா, கனடா, போலந்து போன்ற நாடுகளில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக மேற்கொள்ளப்பட்ட நவீன அறிவியல் ஆய்வின் மூலமாக உயர்ந்த சக்திவாய்ந்த மருந்தின் மாற்றாகவும், ஒரு சத்துணவாகவும் ரிஷியின் பயன்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன.

5000 ஆண்டுகளாக பெறப்பட்டுள்ள அனுபவத்தின் அடிப்படையில் எந்தவிதபக்க விளைவுகளும் அற்றது ரிஷி என பாதுகாப்புடன் கூறலாம். இது அரிதாகவே கிடைப்பது என்பதால், பழங்காலத்தில் மாமன்னர்களுக்கு மட்டுமே கிடைக்கக்கூடியதாக இருந்தது. சீனாவின் முதல் மாமன்னரான ஷிஹுவாங் பான்தி என்பவர் 250 இளைஞர்களையும் 250 இளம் பெண்களையும் கொண்ட ஒரு படையினை காட்டிற்கு அனுப்பி, நீண்ட ஆயுளை அளிக்கக்கூடிய ரிஷியைத் தேடிக் கண்டுபிடித்து பயன்படுத்தினார்.

காட்டு ரிஷி என்பது மிகவும் அரிதானது. ஒரு காட்டில் ஒன்று அல்லது இரண்டு ரிஷி காளான்களை மட்டுமே காண இயலும். சீதோஷ்ண நிலையாலோ உயிரினங்களாலோ பாதிக்கப்பட்ட காட்டு ரிஷியின் தரம் எவ்வாறானது எனக் கூற முடியாது. மேலும் காய்ந்த ரிஷி காளான்கள், புதியரிஷிகாளான்களைப்

**கௌதம்ராம்**

போன்ற ஆற்றல் சத்துக்களைப் பெற்றிருக்காது. முதிர்வடைந்தபின், அதன் உடல் பகுதியின் தசைநார்கள் கடினமடைந்து விடுவதால், ரிஷியில் உள்ள பயன் தரும் உயிர்ச் சத்துக்களை பிரித்தெடுத்து ஜீரணிப்பது மிகவும் கடினமானதாகும். காட்டு ரிஷியில் பயன் தரும் உயிர்ச்சத்துகள் இருந்த போதும் ஒரு சிறிதளவு பயன் பெறுவதற்கு பெருமளவு ரிஷியை நமது முன்னோர்கள் பயன்படுத்த வேண்டியிருந்தது. இது பயிரிடப்பட முடியாதது என்பதால் அரிதான இந்த ரிஷிக் காளான்கள் மாமன்னர்களுக்கு மட்டுமே கிடைப்பனவாக இருந்தன. நவீன கால தாவரவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி, பொது மக்களுக்கு பெரும் அளவில்ரிஷிகாளான்கிடைக்க வகை செய்துள்ளது. சிறந்த சூழ்நிலைகளினாலும், போதுமான சத்துணவுகளாலும் ரிஷி தரமாகப் பயிரிடப்படுகிறது. கவனமாகப் பாதுகாப்பதன் மூலம் பயன் தரும் உயிர்ச்சத்தான மைசீலியம் மிக அதிகமாகக்கிடைக்கவகை செய்யப்பட்டுள்ளது. இந்த மைசீலியம் எளிதாக ஜீரணிக்கப்படக்கூடியது. தசை நாரிலிருந்து எடுக்கப்படும் உயிர்ச்சத்து முற்றிலும் முழுமையானதாக இருப்பதுடன், எளிதில் ஜீரணிக்கக்கூடியதாகவும் உளளது. எனவே, ரிஷியின் மருத்துவ குணநலன்களைக் கண்டறியமேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், அதிலிருந்து எடுக்கப்பட்ட மைசீலிய உயிர்ச்சத்தின் மீதே மேற்கொள்ளப்பட்டன.

சிறந்த ரிஷி கப்சூல்கள் தூய ரிஷி மைசீலியத்திலிருந்து எடுக்கப்பட்ட உயிர்ச்சத்தினைக் கொண்டதாகும். தூய ரிஷி ஒரு ஆழ்ந்த, தூய கசப்புச் சுவை கொண்டது. தற்போது ரிஷி கப்சூல்ஸ் வடிவங்களில் கிடைப்பதால் அதன் கசப்புச் சுவையைத் தவிர்க்க முடிவதுடன், அதன் அளவையும் ஒழுங்குபடுத்த முடிகிறது.

★ ரிஷியைக் குழந்தை பிறந்த முதல் நாளிலிருந்தே பயன்படுத்தலாம். வயதுப் பிரச்சினை எழவில்லை.

★ ரிஷி பக்க விளைவுகளை ஏற்படுத்தாத மிகவும் பாதுகாப்பான மிகச் சிறந்த மூலிகைப் பொருள்.

இது உடலிலுள்ள கோடிக் கணக்கான செல்களின் மீது செயல் புரிந்துசெல்களிலுள்ள நச்சுத் தன்மையை நீக்கி, அனைத்து செல்களையும் புதுப்பித்து ஆரோக்கியமாக வாழவகை செய்கிறது.

★ ஒருவர் முதன்முறையாக ரிஷியைப் பயன்படுத்தும் போது, உடலின் மீது அதன் செயற்பாடு அதிகமிருந்தால், தண்ணீரை முடிந்தவரை அதிகம் குடிக்கவும். ரிஷி சாப்பிடுவதன் அளவைக் குறைத்துக் கொள்ளலாம், ஆனால் ரிஷி பயன் படுத்துவதை நிறுத்தாமல் இருக்கவும், இது மனித உடலில் ஏற்படக்கூடியஎல்லா விதமான நோய்களுக்கும் ஏற்றது.

★ ஒருவர் ரிஷியை மட்டும் பயன்படுத்தி ஏற்கனவே உபயோகப்படுத்தும் மற்றைய மருந்துகளை நிச்சயமாக நிறுத்திவிடக்கூடாது. ரிஷி கப்ஸுலுடன், ஒருவர் சிகிச்சைக்காக உபயோகிக்கும் மருந்தைச் சேர்த்தேசாப்பிட வேண்டும். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு, மற்ற மருந்துகளை சிறிது சிறிதாகக் குறைத்துக் கொள்ளலாம்.

★ ரிஷியைப் பயன்படுத்தினால் அறுவை சிகிச்சையைத் தவிர்க்கமுடியாது. அறுவை சிகிச்சையையோ அல்லது அவசர சிகிச்சையையோ தள்ளிப் போடக்கூடாது. ஆனால் அந்த சிகிச்சைக்குப் பிறகு ரிஷியை உட்கொண்டால் நிரந்தர நலம் கிடைக்கும்.

★ அனைத்து நோய்களுக்கும் இது ஒன்றே போதுமானது. காரணம் அனைத்து வியாதிகளும் இந்த ஒரே உடலில் தான் உருவாகின்றன. ரிஷி நோயின் மூலத்தைக் கண்டு அறிந்து அதை வேரோடு எடுத்து விடுகிறது.

★ உடல் ஆரோக்கியமாக இருக்கும் ஒருவரும் ரிஷியைச் சாப்பிடலாம், காரணம் இன்றைக்கு ஆரோக்கியமாக இருப்பவர், ஒருநாள் வியாதிக்கு ஆட்படலாம். வருமுன் காப்பதே சிறப்பு. எனவே ரிஷியை அனைவரும் பயன்படுத்துவது சிறந்தது ஆகும்.

★ ரிஷியை வியாதிகள் இருந்தால் அவை தீரும்வரை குறிப்பிட்ட அளவு சாப்பிட்டு, நோய் நீங்கிய பின் வாழ்நாள் முழுவதும் சாப்பிடலாம்.

★ மருத்துவ (மருந்து)அறிவு இல்லாதவர்கள் ரிஷியை எப்படிப் பயன்படுத்துவது என்ற கேள்வி எழுகிறது. முதலில் இது மருந்து அல்ல. மருத்துவ குணமுடைய உணவுப் பொருள். உதாரணமாக தக்காளிப்பழத்தில் வைட்டமின் சீயும், வேப்பமரத்தின் இலையில் கிருமிநாசினிகளும் இருப்பது போல, ரிஷியில் மிக அதிகமாக மருத்துவ மூலக் கூறுகள் உள்ளன. இதுவே உடலிலுள்ள நோய்களின் மீது செயல்புரிந்து, நோயை அறவே நீக்குகிறது. இதற்கு மருத்துவ அறிவு தேவையில்லை. □

முற்றும்

---

## தினசரி தியானம்

### பலம்

நாயமாத்மா பலஹீனேன லப்யம்
இந்த ஆத்மா பலஹீனனால் அடையப்படுவதல்ல.

முண்டகோபநிஷத்

பலமனைத்தும் நீயே, மற்றென்னைப் பலவானாக்கு.

உயிரை ஓம்புவது பலம். உயிரை அழிப்பது பலமின்மை. நலத்தை நல்குவது பலம். கேடதனைக் கொடுப்பது பலமின்மை. ஒற்றுமையை உண்டுபண்ணுவது பலம். வேற்றுமையை வளர்ப்பது பலமின்மை. பலத்தில் பிறப்பது தூய அன்பு. பலஹீனத்தில் முளைப்பது காமம். பலத்தின் விளைவு முக்தி. பலஹீனத்தின் பயன் பந்தம்.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்



பிரபல எழுத்தாளர் கே.வி. குணசேகரத்தின் "கனவுகள் கற்பனைகள்" சிறுகதைத் தொகுதி நூல் அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டது. வெளியீட்டு விழாவிற்குத் தலைமை வகித்த கலாநிதி எஸ். சிவலிங்கராஜா உரையாற்றுவதையும், முதற்பிரதியை டாக்டர் வை. தியாகராஜா வெளியிட்டு வைப்பதையும், அருகில் எழுத்தாளர் கே.வி. குணசேகரம் நிற்பதையும் முதலாவது படத்திலும், பேராசிரியர் நா. சுப்பிரமணிய ஐயர் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும், நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம்.

## வடக்கு கிழக்கில்

# 3000 ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர்!

(திருகோணமலை)

மூவாயிரம் ஆசிரியர்களை நியமிக்க வடக்கு கிழக்கு மாகாண சபை நடவடிக்கை எடுத்துள்ளதென்று கல்வி அமைச்சின் செயலாளர் கே. சண்முகலிங்கம் தெரிவித்துள்ளார்.

உலக வங்கியின் அங்கீகாரத்துடன் வழங்கப்படவுள்ள இவ் ஆசிரியர் நியமனத்தில், ஆயிரம் பேர் தமிழ் மொழிமூல பட்டதாரி ஆசிரியர்களெனவும், ஏனையவர்கள் தொண்டர் மற்றும் க.பொ.த. உயர்தரப் புள்ளி அடிப்படையில் தெரிவு செய்யப்படும் அசிரியர்களெனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-4)

### உயர் நீதிமன்றம்...

மேற்படி மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதியரசர்கள் பதவியுயர்வுகளை ரத்துச் செய்ததோடு, பிரஸ்தாப மனுதாரர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் பொலிஸ் மாஅதிபர் வழங்கவேண்டுமென உத்தரவிட்டுள்ளனர். (ந-4)

### பொருட்கள்...

பிரதிநிதிகள் அரசாங்க அதிபர் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

இந்த உபகுழு தொடர்பாக சுகாதார அமைச்சர் தயாரத்தின கருத்துத் தெரிவிக்கையில்:

வடமாகாணத்தில் வாழுகின்ற மக்கள் அனுபவிக்கின்ற பிரச்சினைகள் குறித்து இக்குழு மாதம் ஒரு முறை கூடி ஆராய்வதுடன் வடபகுதிக்கான உணவு, எரிபொருள், மருந்து வகைகள் முறையாக அனுப்பி வைக்கப்படுகின்றதா? என்பதையும் அதில் தடையேதும் உண்டா என்றும் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பது இந்த உபகுழுவின் நோக்கமாக இருக்கும் என்றும் கூறினார். (வ)

### தமிழக...

தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்களை விடுதலை செய்து அவர்களை பாதுகாப்பாக இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்று ஏகோபித்த ரீதியில் மகாநாட்டில் கருத்து தெரிவிக்கப்பட்டது.

இதனடிப்படையிலேயே மேற்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த 14வருடகாலமாக தமிழக சிறப்பு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று தேசிய உரிமை ஆணையம் ஏற்கனவே அறிவித்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

### வைத்திய...

பரிசோதனைகளுக்கு உட்படுத்தினர். இவ்வைத்தியர் குழுவுடன் யாழ் போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரிகளும் இணைந்து பரிசோதனைகளில் ஈடுபட்டனர்.

இதேவேளை, இன்று யாழ். போதனாவைத்தியசாலையில் பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை வைபவரீதியாக ஆரம்பமாகவுள்ளது.

எரிகாயங்களினால் பாதிப்படைந்தவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் சிகிச்சை அளிக்கப் படும் என்றும், இதுவரை இச்சிகிச்சை பெற சுமார் 300போர்வரை பதிவு செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (இ.10.104)

### புனர்வாழ்வு...

சன்துறை சீமெந்து தொழிற் சாலை மற்றும் வலி வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் வாழும் அகதி முகாம்கள் ஆகியவற்றையும் பார்வையிடுவார்.

இதனையடுத்து இன்று பிற்பகல் 2.30 மணிக்கு யாழ் செயலகத்தில் நடைபெறவுள்ள திணைக்களத் தலைவர்களுடனான கலந்துரையாடலில் பங்குபற்றுவதுடன் நாளை காலை கொழும்பு புறப்படுவார்.

இதேவேளை, புனர்வாழ்வு அதிகார சபைத்தலைவர் என். வாமதேவன் அமைச்சின் செயலாளர் அ.ஜெயரத்தினம், கணக்காளர் எஸ்.அபயரத்தினா நிதி ஆலோசகர் எஸ் அன்னலிங்கம் ஆகியோர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்

### பாதுகாப்பு...

சின் நடவடிக்கை தலைமையகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில், எந்த வொரு இலங்கை பிரஜையும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின்றி யாழ்ப்பாணம் வரமுடியும்.

இவர்கள் தமது அடையாள அட்டைகளை மாத்திரமே சோதனைச் சாவடியில் காண்பிக்க வேண்டும்.

இதேவேளை, இலங்கை பிரஜை அல்லாதோர் வடபகுதிக்கு வரவேண்டுமாயின் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறவேண்டும். எனினும் அவர்கள் அந்நாட்டிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் உறுதிப்படுத்தப்பட்ட கடிதங்களை கொண்டுவருவார்களாயின் அவர்களும் அமைச்சின் அனுமதியின்றி வரமுடியும்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்கு செல்லவிரும்புவோருக்கும் இவ்வனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் இப்பிரதேசங்களுக்கு செல்பவர்கள் தமக்கு ஏற்படக் கூடிய விளைவுகளுக்கான முழுப் பொறுப்பையும் அவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ந.4)

### புரிந்துணர்வு...

வேயின் பிரதியமைச்சர் ஐவன் ஹெல்கிசன் தலைமையிலான சமாதானக்குழு தயாரித்துள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக பத்திரிகைகள் முன்னுக்குப் பின் முரணாகவும், பக்க சார்பாகவும் தகவல் வெளியிட்டு வருவதாகவும், அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சரும், முன்னாள் விசேட தூதுவர் எரிக்ஷோல் ஹேய்மும் கடந்த வாரம் இலங்கை அரசுடனும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடனும் பேச்சுக்கள் நடத்தியுள்ளனர் என்றும் நோர்வே தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க நிரந்தர யுத்தநிறுத்தம் தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இடம் பெறவேண்டிய முக்கிய அம்சங்கள் குறித்து இன்று லண்டனில் உள்ள விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் நோர்வேயின் சமாதான தூதுக்குழுவினர் பேசவுள்ளனர். (வ)

**Jaffna College of Technology**
**Vddukoddai.**

**VACANCIES**

1. **Clerk Typist** - Qualification: G.C.E. (A/L) with minimum experience of one year in Clerical Work. Typing skills with Computer Literacy preferrable.
2. **Security Guards** - Please bring References.

**Short listed candidates will be called for an interview.**

**Apply before February 18th, 2002, to**

Director,
**Jaffna College Institute of Technology,**
Vaddukoddai.

E- mail: jcit@sltnet.lk Telephone: 070 - 213139

[C/3524]

**காளான் வில்லைகள்**

ரூபவாஹினி, சக்தி ரி.வியில் இந்திய டாக்டர்களின் பேட்டியில் கூறப்படும் காளான் வில்லைகளை

**மாரியம்மன் மிலேனியம் ரெலெக்ஸ்**

➲ பருத்தித்துறை வீதி, கோப்பாய்.
T.P. No: 070 - 213073
070 - 212778

➲ 7/9, ஒலிவ் லேன், மட்டக்களப்பு.
T.P. No: 065 - 23374

➲ 100, மருதானை ரோட், ஹெந்தல, வத்தளை
T.P. No: 078 - 606754



ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

[C/3523]

**Jaffna College Institute of Technology,**
Vaddukoddai.
E- mail: jcit@sltnet.lk Telephone: 070 - 213139
[C/3524]

தேவன் அமைச்சின் செயலாளர் அ.ஜெயரத்தினம், கணக்காளர் எஸ்.அபயரத்தினா நிதி ஆலோசகர் எஸ் அன்னலிங்கம் ஆகியோர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர். (வ.10)

T.P. No: 07[illegible] 006754
ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
[C/3523]

தரம் நாடுவோர் தவறாமல் நாடும் இடம்...

**நிருத்திகா ஜுவலர்ஸ்**

177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். PHONE: 021 - 2694



கச்சாய் வினோபா சனசமூக நிலையம் கச்சாய்க் கிராமத்திலிருந்து கடந்த உயர் தரப் பரீட்சையில் 2A, 1B பெறுபேறினைப் பெற்று யாழ். பல்கலைக்கழக கலைப் பீடத்திற்கு தெரிவாகிய மாணவன் ஜீவரத்தினம் சுசீகரனை கௌரவித்த வைபவத்தில், நிலையத்தின் சார்பில் மாணவனின் தாயாருக்கு ரூபா. 5000 பெறுமதியான காசோலையை தென்மராட்சி பிரதேச செயலர் திரு. பு. சுந்தரம்பிள்ளை வழங்குவதை முதலாவது படத்திலும், தந்தையை சாவகச்சேரி இந்துவின் முன்னாள் அதிபர் திரு. க. மகேஸ்வரன் வெகுமதியளித்து கௌரவிப்பதை இரண்டாவது படத்திலும், மேற்படி மாணவனுக்கு தங்கப்பதக்கத்தை, சாவகச்சேரி இந்துவின் நட்சத்திரமும் சர்வதேச உதைபந்தாட்ட நடுவருமாகிய திரு. கே. கிருஸ்ணன் அணிவித்து கௌரவிப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

இப்பத்திரிகை வலம்புரி அன் கோ தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.02.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.